பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

PUBL... JAFFNA.

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 24 வெள்ளிக்கிழமை (06.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:072

# எந்தச் சக்தி தலையிட்டாலும் அரசு யுத்தத்தை நிறுத்தாது!

## நாடாளுமன்றில் பிரதமர் திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 06

எந்தச் சக்திகள் தலையிட்டாலும் புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறுத்தப்படவே மாட்டாது என்று அரசு நேற்று தெரிவித்தது.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே அரசின் இந்த நிலைப்பாட்டைத் திட்டவட்டமாக அறிவித்தார்.



அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஆயுதங்கள் மீது நம்பிக்கை வைத்திருந்த சிலர் இப்போது ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை வைத்து ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ளனர். அவர்கள் இப்போது கிழக்கின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றனர்.

வடக்கிலும் இதேநிலைமை ஏற்படவேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். இந்த நிலைமையை ஏற்படுத்தவே எமது படையினர், இப்போது போராடிக்கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் புலிகளின் கோட்டைகளையெல்லாம் தகர்த்து புலியின் குகையின் நுழைவாயிலில் நின்று சவால் விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இதனால், புலிகள் இப்போது போக்கிடம் இன்றிக் கஷ்டப்படுகின்றனர். இந்த யுத்த நடவடிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துக்கொண்டு புலிகளை முற்றாக ஒழிக்க அனைவரும் ஒரு பொது இணக்கப்பாட்டின் கீழ் ஒன்று சேர அழைப்புவிடுத்திருக்கிறோம்.

சிலர் இந்த அழைப்பை ஏற்றதோடு, சிலர் அதை நிராகரித்துவிட்டுப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படத் தொடங்கினர்.

ஆனால், இந்த நாட்டு மக்கள் அனைவரும் பயங்கரவாதத்தின் ஆபத்தை உணர்ந்து எமது நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கிவருகின்றனர்.

மக்கள் இதற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராகவுள்ளனர். புலிகள் தோற்கடிக்கப்படும் போதெல்லாம் மக்கள் வீதியில் இறங்கி மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

புலிகளின் போராட்டம் தோல்வியைத் தழுவக்கூடியது என்பதைப் புலிகள் உணரவேண்டும். புலிகளில் சிலர் அரசிடம் சரணடையப் போகின்றனர் என்றுஅண்மையில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சாளை, விசுவமடு பகுதிகள் இராணுவத்திடம் வீழ்ந்தன

கொழும்பு, பெப்.6

முல்லைத்தீவு மாவட்டத்தில் எஞ்சியுள்ள கடற்புலிகளின் முக்கிய தளமாகிய சாளைப் பகுதியையும், விசுவமடுப் பகுதியையும் உக்கிர சண்டைகளின் பின்னர் படையினர் தம் வசப்படுத்தியிருக்கின்றனர் என இராணுவத் தலைமையகம் அறிவித்திருக்கின்றது.

சாளையைக் கைப்பற்றுவதற்காக இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் மீது நடத்திய தாக்குதல்களின் போது கடற்புலிகளின் முக்கிய உறுப்பினர்களோடு குறைந்தது 12 விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளனர் என்றும் இராணுவத் தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

## புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும்; அரசு போரை உடனடியாக நிறுத்த வேண்டும்

### இந்தியா வலியுறுத்துகிறது



கொழும்பு, பெப். 06

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்றும் இலங்கை அரசு போரை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் இந்திய அரசு கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இலங்கை நிலைவரம் குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ள இந்தியா, விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசையும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்திய உள்துறையமைச்சர் ப.சிதம்பரம் நேற்று வியாழக்கிழமை இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இலங்கை நிலைவரம் குறித்து மத்திய அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது எனவும், இரு தரப்பும் இந்தியாவின் வேண்டுகோளை செவிமடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

"இலங்கை அரசை 48 மணித்தியாலங்களுக்கு மோதலை நிறுத்துமாறு இந்திய அரசால் கேட்டுக்கொள்ள முடிந்தது. எனினும் விடுதலைப் புலிகள் இதற்குப் பதிலளிக்கவில்லை." - என்று அவர் குறிப்பிட்டார்.

"இரு தரப்புகளும் எமது வேண்டுகோள்களை செவிமடுக்க வேண்டும்; விடுதலைப்புலி கள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்;. இலங்கை அரசு மோதல்களை நிறுத்தவேண்டும்." இவ்வாறு அவர் வேண்டு கோள்விடுத்தார்.

"உயிரிழப்புகள் ஏற்படும்போது நாங்கள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயப் பகுதிகளில் ஷெல் தாக்குதல் வைத்தியசாலை சேதம்; 43 பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.6

வன்னியில் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள உடையார்கட்டு வைத்தியசாலை மீதும் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீதும் நேற்று முழுவதும் ஆட்லெறி ஷெல் தாக்குதல், பல்குழல் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 43 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன், 155 பேர் காயமடைந்துள்ளனர் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ள உடையார்கட்டு வைத்தியசாலை மீது நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஷெல் வீச்சில் 7 பொதுமக்கள் படுகொலை செய் யப்பட்டுள்ளதுடன் 27 பேர் காயமடைந்துள் ளனர். இரண்டு அம்புலன்ஸ்களும் மருந்துக் களஞ்சியமும் முற்றாகச்சேதமடைந்துள்ளன.

இதேநேரம் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான சுதந்திரபுரம், இருட்டுமடு, வள்ளிபுனம், தேவிபுரம் ஆகிய பகுதிகள் மீது நேற்று ஆட்லறி, பல்குழல் ஷெல் தாக்குதல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

சுதந்திரபுரம் பகுதி மீது நேற்று பகல் முழுவதும் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 11 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 58 பேர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களின் 10 சடலங்கள் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இருட்டுமடுப்பகுதியில் நேற்று பகல் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 16 தமிழர்கள் உயிரிழந்துள்ளதுடன் 42 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், வள்ளிபுனம் பகுதியில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை, புதுக்குடியிருப்பில் 13 தடவைகள் விமானத்தாக்குதல்

கொழும்பு, பெப். 06

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதிகள் மீது கடந்த இரு நாள்களாக விமானப் படையின் ஜெற் விமானமும் எம்.ஐ.24 ஹெலிகொப்டர்களும் மொத்தம் 13 தடவைகள் தாக்குதல் நடத்தின.

புதுக்குடியிருப்புச் சந்தியில் இருந்து வடக்கே சுமார் ஒன்றரைக்கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டளை நிலையம் மீது நேற்று முற்பகல் 10.10 மணியளவில் விமானப் படையினரின் கிபிர் விமானங்கள் தாக்குதல்களை நடத் தின என்று படைத்தரப்பில் கூறப்பட்டது.

அதேவேளை, புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம்(16 ஆம் பக்கம் பார்க்க)

## எரிக் சொல்ஹெய்ம் இந்தியா வந்தார்: பிரணாப் முகர்ஜியுடன் சந்திப்பு

### இலங்கைப் பிரச்சினை குறித்து ஆராய்வு



புதுடில்லி, பெப்.02

நோர்வே நாட்டு அமைச்சரும், இலங்கைக்கான சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் நேற்று இந்தியாவுக்கு விஜ யம் செய்துள்ளார்.

இந்தியாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து இவர் பேச்சு நடத்தினார். அதன் போது இலங்கையில்(16 ஆம் பக்கம் பார்க்க)

## கொத்தணிக் குண்டுகளைப் பாவித்தமைக்காக இராணுவத்தைக் கண்டிக்கிறது மன்னிப்புச்சபை

கொழும்பு, பெப். 06

வன்னியில் இலங்கை இராணுவம் கொத்தணிக் குண்டுகளை பயன்படுத்துவதை கடுமையாக கண்டித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை , இது சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை கடுமையாக மீறும் செயலென்று சாடியுள்ளது.

(முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மருத்துவமனை

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னியில் ஒரு வாரத்தில் மட்டும் 733 மக்கள் பலி!
# 2,615 பேர் காயமுற்றனர்: நாடாளுமன்றில் கூட்டமைப்பு தகவல்

கொழும்பு, பெப். 06

ஜனவரி மாதம் 26ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வரையிலான ஒரு வாரகாலப் பகுதியில் மாத்திரம் வன்னியில் படையினர்மேற்கொண்ட ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்கள் காரணமாக 733 பொது மக்கள் கொல்லப்பட்டும் 2 ஆயிரத்து 615 பேர் காயமடைந்துமுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புநேற்று நாடாளுமன்றில் தெரிவித்தது.

இவ்வாறான தாக்குதல்களை உடன் நிறுத்தி தமிழர்களுக்குப் பொதுவான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் பொருத்தமற்ற தீர்வை இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தமிழர் மீது பலவந்தமாகத் திணிக்க முற்பட்டால் அதை ஏற்க முடியாது என்றும் கூட்டமைப்பு கூறியது.

சபையில் நேற்று இடம்பெற்ற அவசரக் காலச் சட்ட நீடிப்பு பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் இதைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரசு தமிழர்களின் இடங்களைக் கைப்பற்றிக் கொண்டுபோகின்றது. கைப்பற்றப்பட்ட ஓர் இடத்தில் கூட ஒரு தமிழரும் இல்லை., அனைவரும் இடம் பெயர்ந்து விட்டனர்.

யாழ்ப்பாணத்தில் மூன்றில் ஒரு பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாகிவிட்டது. திருகோணமலை, மூதூர் அதி உயர் பாதுகாப்பு வலயமாகிவிட்டது.

**தமிழர்கள் விரட்டப்பட்டனர்**

இவ்வாறு படையினரால் பிடிக்கப்படும் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மக்கள் விரட்டப்படுகின்றனர்.

வன்னியில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களால் சுமார் 300 சிறுவர்கள் கை, கால்களை இழந்துள்ளனர். இவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தால் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

ஆனால், அந்தச் சிறுவர்களின் பெற்றோர்களை படையினர் பிடித்து பலவந்தமாக அகதி முகாம்களுக்கு அனுப்பி விடுகின்றனர். சிறுவர்களை கவனிக்க எவருமில்லை.

இதுதான் அரசு கூறும் தமிழர் விடுதலையா? சிறைச்சாலைகாளாகவே இந்த அகதி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இந்த வருடம் ஜனவரி 26 ஆம் திகதி முதல் பெப்ரவரி 2 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களால் 733 பொது மக்கள் கொல்லப்பட்டும் 2 ஆயிரத்து 615 பேர் காயமடைந்துமுள்ளனர்.

**ஜனவரி மூன்றில் மட்டும் 322 பேர் கொல்லப்பட்டனர்.**

அதேபோல், ஜனவரி மூன்றாம் திகதி மாத்திரம் 322 பேர் கொல்லப்பட்டதோடு 985 பேர் காயமடைந்துள்ளனர். இலங்கை அரசு தொடர்ந்தும் மக்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகிறது.

அரசு இவ்வாறான தாக்குதல்களை நிறுத்தி தமிழர்களுக்கு பொருத்தமான அரசியல் தீர்வை வழங்க வேண்டும்.

அப்படி இல்லாது அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் எம்மீது பலவந்தமாக அரசியல் தீர்வைத் திணிக்க முற்பட்டால் அதை நாம் ஏற்கமாட்டோம்- என்றார். (அ-சி)

## புதன்கிழமை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 4 சிறுவர்கள் உட்பட 13 பேர் படுகொலை

கொழும்பு, பெப்-06

முல்லைத்தீவு, புதுகுடியிருப்பு வைத்தியசாலை மற்றும் அம்பலவன்பொக்கனைப்பகுதிகள் மீது நேற்று முன்தினம் புதன்கிழமையன்று மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் 4 சிறுவர்கள் உட்பட 13 பேர் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 36 பேர் வரை படுகாயமடைந்தனர் நேற்று என்று இணையத்தளங்கள் நேற்றுச் செய்தி வெளியிட்டன.

முல்லத்தீவு மாவட்டத்தில் உள்ள அம்பலவன்பொக்கணை பகுதியில் இடம் பெயர்ந்த மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலின் போது 4 சிறுவர்கள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர். 36 பேர் காயமடைந்துள்ளனர்.

சா.சுதாஸ்(வயது-05), பாலசேகரன் கஜேந்திரன் (வயது-10), பாலசேகரன் கஜானா (வயது-13), செல்வநாயகம் கிளி (வயது-31), சின்னப்புஇராசமலர்(வயது-56), சின்னப்பு கெங்காதரன் (வயது-45), பொ.ஜீவமலர் (வயது-53), ஆகியோர் படுகொலை செய்யப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டவர்கள். கொல்லப்பட்ட மேலும் மூவரின் உடல்கள் சிதறிக் கிடப்பதனாலும், அவர்கள் இடம்பெயர்ந்தனாலும் அவர்களின் பெயர் விபரங்களை உடனடியாக பெற முடியவில்லை.

மேலும் இத்தாக்குதலின் போது மதன் மபீசன் (வயது-04), தமிழ்மாறன் சர்மிகா (வயது-09), கெங்காதரன் பாலதாரணி (வயது-06), கெங்காதரன் தர்மேஸ் (வயது-08), சிவநேசம் (வயது-30), த.சாந்த நேசன் (வயது-37), கோ.மந்திரம் (வயது-47), மகேந்திரம் இராசமலர் (வயது-47), சௌந்தரராசா சறோஜினி தேவி (வயது-45), அன்ரன் மேரிமலர் (வயது-30), புஸ்பராசா ரேணுகாதேவி (வயது-28), செல்வராசா புஸ்பராஜா (வயது-30), தினகரன் சின்னத்தம்பி (வயது-55), வல்லிபுரம் கோமதி (வயது-30), தமிழ்மாறன் மேனகா (வயது-29), தர்மரசா வாகீசன் (வயது-23), யோசப் டில்லிமலர்(வயது-63), செபமாமாலை விக்ரர் (வயது-72), சின்னத்துரை தனராசா (வயது-50), தனராசா புஸ்பராணி (வயது-45) ஆகியோர் உள்ளிட்ட 36 பேர் காயமடைந்துள்ளார்.

அன்றயதினம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவின் மீது மேற்கொள்ளப்பட்ட பீரங்கித்தாக்குதலில் அப்பிரிவில் சிகிச்சைபெற்று வந்த அ.வசந்தகுமார். (வயது-26), ப.மதன்ராஜ் (வயது-19), ஆகியோர் கொல்லப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த மற்றுமொருவரான அமலச்செல்வன் கஸ்தூரி (வயது-26), என்பவர்அடுத்தடுத்து நடத்தப்பட்ட தாக்குதல்களின் உயிரிழந்தார் என்று இணையத்தளங்கள் மேலும் வெளியிட்டன.

கடந்த சில நாள்கள் மேற்கொள்ளப்பட்ட பீராங்கித் தாக்குதலில் சுதந்திரபுரம் வைத்தியசாலைமற்றும் உடையார்கட்டு வைத்தியசாலைகளில் வைக்கப்பட்டுள்ளன என்று அந்த இணையத்த தளங்கள் மேலும் குறிப்பிட்டன. (அ-சி)

## வன்னியிலிருந்து வந்த மக்களை வவுனியாவில் 10 வருடங்கள் அடைத்துவைக்க அரசு திட்டம்

கொழும்பு, பெப். 06

வவுனியாவில் உள்ள அகதிமுகாம்களில் வன்னி மக்களைக் குறைந்தது 10 வருடங்களுக்கு சிறைக்கைதிகள் போல் தடுத்துவைக்க அரசு திட்டம் தீட்டியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. செல்வம் அடைக்கல நாதன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் மனித நேயம் என்ற பேச்சுக்கே இடமில்லை. தமிழர்கள் படுமோசமாகக் கொல்லப்படுகின்றனர். கடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

வன்னியில் மூன்றரை லட்சம் மக்கள் படையினரின் ஷெல் தாக்குதல்களை எதிர்கொண்டு வருகின்றனர். படையினரின் ஷெல்கள் வன்னி மக்களின் தலைகளில் தான் விழுகின்றன.

மக்கள் ஆடு, மாடுகளுடன் சேர்ந்து வீதிகளில் இறந்து கிடக்கின்றனர். அவர்களின் உடல்களை எடுத்து அடக்கம் செய்யக்கூட உறவினர்களால் முடியாமல் உள்ளது.

மறுபுறம் வன்னி மக்கள் பெரும் பட்டினியை எதிர்கொண்டுள்ளனர். விருந்தோம்பலில் சிறந்து விளங்கும் எமது மக்கள் உணவுக்காகப் பிறரிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வன்னி மக்களை வவுனியாவில் உள்ள அகதி முகாம்களுக்கு வருமாறு படையினர் பலவந்தப்படுத்துகின்றனர். அவ்வாறு வருபவர்கள் படையினரால் வடிகட்டி எடுக்கப்படுகின்றனர். பின்னர் காணாமல் போகின்றனர்.

வவுனியா நெலுக்குளம், மெனிக்பாம் மற்றும் மன்னார், அடம்பன் போன்ற பகுதிகளில் அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களை சுமார் 10 வருடங்களுக்கு நடத்திச் செல்ல அரசு திட்டம் தீட்டியுள்ளது. அப்படியாயின் மீட்கப்பட்ட பகுதி களில் அரசு என்ன செய்யப் போகிறது என்று தெரியவில்லை - என்றார்.

## உலக நிதிச் சிக்கல்கள் குறித்த கருத்தரங்கு திங்களன்று

யாழ்ப்பாண முகாமையாளர்கள் கழகம், யாழ்.மாவட்ட வங்கியாளர்கள் சங்கத்துடன் இணைந்து நடத்திவரும் கருத்தரங்குத் தொடரில் 'நிதிச் சிக்கல்களும் அவற்றின் தாக்கங்களும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு எதிர்வரும் ஒன்பதாம் திகதி மு.ப. 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும். நல்லூர் - பருத்தித்துறை வீதிக்கு அண்மையிலுள்ள இல. 17, கமநலசேவை ஒழுங்கையிலுள்ள யூரோவில் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கு, கழகத் தொடரில் 17 ஆவது நிகழ்வாகும். ஆர்வலர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு மேற்குறித்த விடயம் தொடர்பான தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொள் ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-3)

## வழுக்கையாற்றுத்திட்டச் செயற்பாட்டில் முன்னேற்ற வேகம் போதாது என்கிறார் அமைச்சர்

யாழ்ப்பாணம், பெப்.6

குடாநாட்டின் வரலாற்றில் பதியப்பட வேண்டிய மிகவும் இன்றியமையாத வளங்களில் ஒன்றான வழுக்கையாற்றுத் திட்டத்தின் செயற்பாட்டில் முன்னேற்ற வேகம் போதாது.

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வழுக்கையாற்று புனரமைப்பு வேலைத் திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய உயர்மட்ட கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வழுக்கையாற்று புனரமைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்கு இடைஞ்சலாக இருக்கும் தடைகளை இனம்கண்டு, அவற்றை உடனடியாக அகற்றி, இத் திட்டத்தை வெகு விரைவில் பூர்த்திசெய்ய வேண்டும். இதன் மூலம் பயனை எமது மக்கள் வெகு விரைவில் அனுபவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.



மேற்படி மாநாட்டின் போது வழுக்கையாற்றுப் புனரமைப்பு வேலைத் திட்டங்கள் தொடர்பில் விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டதுடன் நீர்பாசன திணைக்களத்தால் குடாநாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற தொண்டைமானாறு புனரமைப்பு, உவர்நீர் தடுப்புத் திட்டங்கள், உப்பாறு உவர்நீரேரி திட்டம் போன்றவை தொடர்பிலும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

16.01 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்ட வழுக்கையாற்றுப் புனரமைப்பு வேலைத் திட்டத்தின் மூலம் கடல்நீர் உட்புகுதலைத் தடுத்தல், வெள்ளநீரை வெளியேற்றுதல், தரைக்கீழ் நீர் வளத்தைப் பேணுதல், நிலத்தடி நீரின் உவர்த்தன்மையைத் தடுத்தல் போன்ற நடவடிக்கைகளையும், அதே நேரம் 1300 ஹெக்டெயர் வயல் நிலங்களிலும் 150 ஹெக்டெயர் மேட்டு நிலத்திலும் பயிற்செய்கைகளையும் மேற்கொள்ள முடியும் என்பதுடன் இதன்மூலம் 4,950 நேரடி விவசாயக் குடும்பங்களும் 15,000 குடும்பங்களும் பயனடையும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி மாநாட்டில் யாழ்.அரச அதிபர், பிரதித்திட்டப் பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்கள உயர் அதிகாரிகள், குத்தகைக்காரர்கள், தேசவள விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்- என்று அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்மராட்சியில் நாளை மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 06

தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் சங்க எல்லைப் பரப்பில் உள்ள கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும் கடந்த 2007 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கவுள்ளனர்.

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் தர்மலிங்கம் பாசுபதன் மற்றும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற ஊக்குவித்த சங்க எல்லைப் பரப்பில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள் சித்தி பெற்ற மாணவர்களின் பெற்றோர் ஆகியோர் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் இணைத்தலைமைகளின் அறிக்கை

இலங்கை இனப்பிரச்சினையின் விளைவான உள்நாட்டுப் போர் மிக மோசமான கட்டத்தை அடைந்து, சிவிலியன்கள் பெரும் எண்ணிக்கையில் கொன்றொழிக்கப்படும் பேரவலம் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில் டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் இணைத்தலைமைகள் என்று தம்மை வர்ணித்துக்கொள்ளும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே ஆகியவை ஒன்றிணைந்து விடுத்திருக்கும் ஒரு கூட்டறிக்கை பலத்த வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பியிருக்கின்றது. குறிப்பாகப் புலம்பெயர்ந்த தமிழர் வாழும் தேசங்களில் இந்த நான்கு நாடுகளுக்கும் எதிரான உணர்வலைகளை இந்த அறிக்கை கிளப்பி விட்டிருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே சாத்தியம் - ஒரே வழி - என்று கூறிக்கொள்ளும் சர்வதேசம், மறுபுறத்தில் மேற்படி அறிக்கை மூலம், இராணுவத் தீர்வில் ஒரே முனைப்பாகவும் வெறியாகவும் இருக்கும் இலங்கை அரசின் எத்தனத்துக்கு முண்டு கொடுத்து உதவ முன்வந்திருக்கின்றது என்ற சாரப்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

''ஆயுதங்களைக் கைவிட்டு, வன்முறைகளைத் துறந்து, இலங்கை அரசின் மன்னிப்பு வழங்க முன்வரும் வாய்ப்பை ஏற்று, நீதியான - நீடித்த - அரசியல் தீர்வை எட்டுவதற்கான நடவடிக்கைகளில் ஓர் அரசியல் கட்சியாகப் பங்குபற்றுவது உள்ளிட்ட விடயங்கள் குறித்து இலங்கை அரசுடன் பேசுவதற்குப் புலிகள் இயக்கம் முன்வரவேண்டும்'' - என்ற இணைத் தலைமைகளின் கோரிக்கையே இப்போது பலத்த சர்ச்சையை ஏற்படுத்தி நிற்கின்றது.

ஒருபுறம் இதனைத் தமிழர் தலைமைகள் காட்டமாக விமர்சிக்கின்றன என்றால் மறுபுறம் இந்த அறிக்கை புலிகளுக்கு மீண்டும் உயிரூட்ட மேற்குலகம் எடுக்கும் முயற்சி என இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடுமையாகச் சாடுகின்றார்.

இணைத் தலைமைகளின் இந்த அறிக்கை குறித்து புதுடில்லியைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஆசிய மனித உரிமைகள் மையம் இந்த விடயத்தை ஒட்டி சில வினாக்களை எழுப்பியிருக்கின்றது.

* இணைத்தலைமைகள் குறிப்பிடுவதுபோல இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கை அரசும் புலிகளும் நேரடியாகப் பேசக்கூடிய சூழல் இருக்குமானால், இணைத் தலைமை இத்தகைய அறிக்கையே விடவேண்டிய தேவையே வந்திருக்காது.

* உலகில் எங்கும், எந்த ஆயுதக் குழுவையும் பேச்சுக்கான முன் நிபந்தனையாக ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் எனக் கட்டாயப்படுத்துவது பேச்சை ஆரம்பிக்க வழியே செய்யாது.

* தற்போதைய இராணுவ வெற்றிகளை நல்ல சந்தர்ப்பமாகவும் சாதகமாகவும் பயன்படுத்தி, வடக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் முன் முயற்சிகளை எடுக்குமாறு இலங்கை அரசை இணைத் தலைமைகள் கோரவில்லை.

* 'மனித இழப்பின்றி' யுத்தத்தை முன்னெடுப்பதாக இலங்கை அரசு கூறினாலும், மனிதப் பேரழிவுகள் குறித்து உண்மைகளை செஞ்சிலுவைச் சர்வதேச குழு போன்றவை வெளிப்படுத்தி வருகின்றன. இந்த மனித பேரழிவு அளவீடு மட்டம் குறித்து இணைத் தலைமைகள் தமது அறிக்கையில் எதுவும் குறிப்பிடாமல் மௌனம் சாதிக்கின்றமை கவலைக்குரியது.

* ஜெனீவா பிரகடனம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆகியவை உள்ளடங்கலான யுத்தச் சட்டங்களைக் கடைப்பிடிக்குமாறு இலங்கை அரசையும் புலிகளையும் இணைத் தலைமைகள் கோரவேயில்லை.

* ''வடக்கில் எஞ்சிய தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் அனைத்தையும் புலிகள் மிக விரைவில் இழந்து போகும் அந்த சொற்ப காலம் வரையே அவர்கள் (அந்த சிவிலியன்கள்) அங்கு தங்கியிருக்க வேண்டியிருக்கும்.'' - என வெகு 'ஸிம்பிளாக' குறிப்பிடும் இணைத்தலைமைகள், 'அந்த சொற்ப காலத்திற்குள்' முல்லைத்தீவில் சிக்கியுள்ள சுமார் இரண்டரை லட்சத்துக்கும் அதிகமான சிலியன்களுக்கு ஏற்படக்கூடிய பெரும் உயிரிழப்பை கவனத்தில் கொள்ளாமை அதிர்ச்சி தருவதாகும். அதுவும் சிவில் வைத்தியசாலைமீதே குண்டுவீசி அதை அழிக்கும் தாக்குதல் நடத்தும் கட்டத்துக்கு நிலைமை சென்றிருக்கையில், இணைத் தலைமைகள் இப்படி நடந்து கொள்கின்றன.

- இவ்வாறு சுட்டிக்காட்டிக் கேள்வி எழுப்பியிருக்கின்றது ஆசிய மனித உரிமைகள் மையம்.

இதேசமயம், இணைத்தலைமைகளின் இந்த அறிக்கை வெளியான பின்னர் வாஷிங்டனில் சந்தித்த அமெரிக்க, பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர்களான ஹிலாரி கிளிண்டன் அம்மையாரும் டேவிட் மில்லிபாண்ட்டும் அச்சந்திப்பை ஒட்டி விடுத்த கூட்டறிக்கையில் சில விடயங்களைப் பிரதிபலித்திருக்கின்றார்கள்.

இணைத் தலைமைகளின் முன்னைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான விடயங்களை வரிக்கு வரி தாங்கள் வரவேற்கின்றனர் என்று அதில் குறிப்பிட்ட அவர்கள் இருவரும், ''புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு வன்முறைகளைத் துறந்து, மன்னிப்பு வாய்ப்பை ஏற்று, அரசியல் கட்சியாகச் செயற்படுவது குறித்து இலங்கை அரசுடன் பேசவேண்டும்'' - என்ற இணைத்தலைமைகளின் கோரிக்கைகளை தாங்கள் வரவேற்கின்றனர் என்று எதுவுமே குறிப்பிடாமல் தவிர்த்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

அத்தோடு, ''நீடித்த சமாதானத்துக்காக இலங்கை அரசு, இந்தியா, ஐ.நா. மற்றும் ஏனைய தரப்புகளுடன் சேர்ந்து இணைத் தலைமைகள் பணியாற்றும்'' - என்று இணைத் தலைமைகள் தமது கூட்டறிக்கையில் குறிப்பிட -

ஹிலாரி - மில்லிபாண்ட் கூட்டறிக்கையோ ''ஐ.நா. மற்றும் இணைத் தலைமைகளோடு சேர்ந்து இவ்விடயத்தில் பணியாற்றத் தங்கள் இரு நாடுகளும் தயாராக உள்ளன'' என்று தெரிவித்ததன் மூலம் இவ்விடயத்தில் இந்தியாவைக் 'காய் வெட்டி' விட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைய நாடாளுமன்ற உறுப்பினர் கருணா திட்டம்?



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான கருணா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணையத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ஜெயம், மார்கன், இனிய பாரதி மற்றும் மங்களம் ஆகியோரும் விரைவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைவது குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கடந்த வாரம் கலந்துரையாடியதாகக் கருணா குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் ''கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானின் தலைமையில் இயங்கி வரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர் என என்னைத் தொடர்ந்தும் அடையாளப்படுத்திக் கொள்ளப்போவதில்லை. கிழக்கை மட்டும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறிய கட்சியில் அங்கம் வகிப்பதில் அர்த்தமில்லை. இலங்கையர் என்ற ரீதியில் சிறிய கட்சி வட்டத்திற்குள் அடங்கிச் செயற்பட நான் தயாராக இல்லை.

தேசிய ரீதியிலான அரசியலில் ஈடுபடும் நோக்கிலேயே நான் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்வது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ச ஆகியோருடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் தேர்தல்களின் பின்னர் அரசாங்க அமைச்சுப் பொறுப்பொன்று எனக்குக் கிடைக்கப் பெறலாம்.

திருகோணமலை முதல் அம்பாறை வரையிலான எமது கட்சிக் காரியாலயங்கள் பெயர் மாற்றம் செய்யப்பட உள்ளன. ஒரு நாடு மற்றும் ஒரு கட்சி என்ற கொள்கையை கடுமையாகப் பின்பற்றி வருகின்றேன்''- என்றார்.

## புற்றளை ம.வியில் இன்று திறப்பு விழா

வடமராட்சி, பெப்.6

'நிக்கொட்' நிதி உதவியுடன் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள விஞ்ஞான ஆய்வு கூடம், தண்ணீர்த் தாங்கி, செயற்பாட்டறை என்பவற்றின் திறப்பு விழா இன்று வெள்ளிக் கிழமைகாலை 9.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் என். அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, சிறப்பு விருந்தினர்களாக பாடசாலை வேலைப் பகுதி பொறியியலாளர் ஜி.சிவபாலன், 'நிக்கொட்' நிறுவனத்தின் யாழ். மாவட்ட அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(203-236)

## அதிபர் சேவை தரம் 3இல் உள்ளோரை தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை

அச்சுவேலி, பெப்.6

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இல் பதவி வகிப்பவர்களை இலங்கை அதிபர் சேவை 2:II இற்குத் தரம் உயர்த்துவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

பதவி உயர்வு பெறுபவர்களுக்கான நியமனக்கடிதங்கள் இந்தமாத இறுதியில் வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுகின்றது.

இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவை தரம் 3இல் பதவி வகிப்பவர்களுக்கு குறிப்பிட்ட கால சேவையின் பின்னர் சேவைமூப்பு அடிப்படையில் தரம் 3 இற்கு அடுத்த நிலையில் உள்ள அதிபர் சேவை தரம் 2:II இற்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கு 2000ஆம் ஆண்டு ஒகஸ்ட் 04 ஆம் திகதி நியமிக்கப்பட்டவர்களுக்கும் 2002ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி நியமிக்கப்பட்டவர்களுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

2000ஆம் ஆண்டில் நியமனம் பெற்றவர்களுக்கு முதலாம் கட்டமாகவும் 2002இல் நியமனம் பெற்றவர்களுக்கு 2ஆம் கட்டத்திலும் நியமனம் வழங்கப்படவுள்ளன.

இரண்டு கட்டங்களிலும் தலா 300 பேர் வீதம் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

பதவி உயர்வு தொடர்பான நியமனக் கடிதங்கள் தயார் செய்யப்படுவதாகவும் இந்தமாதம் முடிவதற்கு முன்னர் நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் 2006ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கோரப்பட்டிருந்தன.

சேவை மூப்பு, திறமை அடிப்படையிலான பதவி உயர்வுகள் குறிப்பிட்ட கால அளவின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும் பதவி உயர்வு வழங்குவதில் காலதாமதம் செய்யப்படுவதைச் சுட்டிக்காட்டி இலங்கை தரம்பெற்ற அதிபர் சேவைச் சங்கம் வலிறுத்தியதை அடுத்து பதவி உயர்வு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தரம்பெற்ற அதிபர்கள் சங்கத் தின் உப தலைவர் ஏ.சி.எம். ஜவகர் ஷா தெரிவித்தார். (203-11)

## நகரப் பகுதியில் பிடிக்கப்படும் கால்நடைகளை ஏலத்தில் விடுவதற்கு மாநகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.நகரப் பகுதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாகக் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிடித்து ஏலத்தில் விடுவதற்கான நடவடிக்கைகள் மாநகரசபையால் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ்வாறு ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார். ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில்:-

கட்டாக்காலி ஆடு, மாடுகளால் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன், வீதி விபத்தும் ஏற்படுகின்றன.

வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளை உரிமையாளர்கள் உரிய முறையில் கட்டிவைத்து பராமரிக்க வேண்டியது அவர்களது பொறுப்பு.

கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிடித்து வைத்திருக்கின்ற போது, அதனை உரியவர்கள் குறிப்பிட்ட சில நாள்களுக்குள் மீளப் பெறவில்லையானால் அவற்றை பகிரங்க ஏலத்தில் விடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கட்டாக்காலிக் கால்நடைகளால் மாநாகரசபைக்கு ஏற்படக்கூடிய செலவுகளை உரிமையாளர்கள் செலுத்தி, தமக்குரிய கால்நடையைப் பெற்றுக் கொள்வது குறித்தும் தற்சமயம் ஆலோசிக்கபட்டு வருகிறது.

இந்த நடவடிக்கைகள் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளது.

கால்நடை உரிமையாளர்கள் அவற்றைக் கட்டி வளர்க்க முன்வரவேண்டும்- என்று கூறினார்.

(203-224-111)

## உழவர் தின விழா

யாழ்ப்பாணம், பெப்.6

சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் உழவர் தின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

நிலைய முன்றிலில் நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

(203-207)

## மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளையின் புதிய தொலைபேசி இலக்கங்கள்

யாழ்ப்பாணம், பெப்.6

சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையின் புதிய தொலைபேசி இலக்கங்கள் கடந்த மாதம் 28ஆம் திகதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

பொது/ தொலைநகல்- 021 224 0233, பொது- 060 221 2554, முகாமையாளர்- 021 224 0033 ஆகிய இலக்கங்களை வாடிக்கையாளர்கள் கவனத்தில் கொண்டு தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

## நாளை

| | |
|---|---|
| தை 25 | 07.02.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | பி.இ. 01.27 வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் |
| | பி.இ. 05.03 வரை |
| சுபநேரம்: | 03.35 - 05.05 |
| ராகுகாலம்: | 09.35 - 11.05 |

## பாடசாலை அரங்குக்கு இன்று அடிக்கல்

யாழ்ப்பாணம்,பெப்.6

இலங்கை லயன்ஸ் கழகத்தின் - அச்சுவேலி வட்டத்தின் ஏற்பாட்டில் லயன் ஆறுமுகம் நடராஜாவின் அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ள புத்தூர் - நவக்கிரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கான திறந்தவெளி அரங்குக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி பாடசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ள இந்த நிகழ்வில் கௌவர விருந்தினர்களாக வடபிராந்திய பிரதிச் செயலாளர் லயன் எஸ்.சிவராஜேஸ்வரன் மற்றும் பிரதிப் பொருளாளர் லயன் எஸ்.எஸ். தங்கராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக லயன் எஸ்.ரவீந்திரா, லயன் வீ.ஸ்ரீபிரகாஸ் மற்றும் லயன் ரீ.ரீ.சிவதாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ள இந்த நிகழ்வின் இறுதியில் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களது இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

## சனசமூக நிலையங்களுக்கு பல்துறை சார்ந்த நூல்கள்

யாழ்ப்பாணம், பெப்.6

குடாநாட்டில் செயற்பட்டு வரும் சனசமூக நிலையங்களின் பயன்பாட்டுக் கெனப் பல்துறை சார்ந்த நூல்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்படவுள்ளன.

இந்த நூல்களைப் பெறவிரும்பும் சனசமூக நிலையங்கள், உரிய கோரிக்கைகளுடன் அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பதிவுகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி வடக்கு, பெப்.6

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆண்களுக்கான போட்டியில் 14 கழகங்களும் பெண்களுக்கான போட்டியில் 7 கழகங்களும் கலந்து கொள்ளவுள்ளன. (1-86)

* * *

யாழ்ப்பாணம், பெப்.6

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப. 1 மணிக்கு வித்தியாசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வி க.கமலநாயகி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முன்னாள் பேராசிரியரும், யாழ்.செஞ்சிலுவைச் சங்கத் தலைவருமாகிய வீ.கே.கணேசலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் யா.நக்கீரனும், கௌரவ விருந்தினராக கொக்குவில் கிழக்கு கிராம அலுவலர் எ.அம்பிகைபாலனும் கலந்து கொள்வார்கள். (1-6)

* * *

வலிவடக்கு, பெப்.6

தேசிய மட்டத்திலான கிராமங்களுக்கு இடையேயான ஓட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை கொழும்பு பத்தர முல்லையில் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகளில் வட மாகாணத்தைச் சேர்ந்த 20 வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளார்கள். கடந்த வாரம் வட மாகாண மட்டத்தில் இடம் பெற்ற கிராமங்களுக்கு இடையேயான ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகள் 6 பேர் கலந்து கொள்கின்றனர்.

மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற யாழ். மாவட்ட வீராங்கனைகளுடன் வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுமாக 10 பேரும் -

ஆண்கள் பிரிவில் முறையே 6ஆம், 7ஆம், 8ஆம் இடங்களைப் பெற்ற மூன்று வீரர்களுடன் வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 10 வீரர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (1-86)

* * *

வலிவடக்கு, பெப்.6

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு மாவட்ட மட்டத்தில் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக் கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக மேசைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகளுக்கான நிரல் ஒழுங்குகள் காலை 8 மணிக்கு தயாரிக்கப்படவுள்ளமையால் இப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள கழகங்களை காலை 8 மணிக்கு நிரல் ஒழுங்கில் கலந்து கொள்ளும்படியும் நிரல் ஒழுங்கில் கலந்து கொள்ளாத அணிகளுக்கு விளையாட எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதி வழங்கப்படாத துடன் நிரல் ஒழுங்கிலும் இணைத்துக் கொள்ளப் படமாட்டாது எனவும் யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி ஜெ.எவ்.எ.றூபசிங்கம் அறிவித்துள்ளார்.

பங்கு பற்றும் கழகங்களை உரிய நேரத்திற்கு சமுகம் கொடுத்து போட்டிகளில் கலந்து கொள்ளும்படியும் வேண்டியுள்ளார். (1-86)

## கண்ணீர்அஞ்சலி

*எமது சபையின் சக ஊழியர்*

**யோசெப் யேசுராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன் துறை, மல்லாகம்.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில் 19 ★ 07 ★ 1959*



*ஆண்டவன் அடியில் 25 ★ 01 ★ 2002*

திதி: துவாதசி

**அமரர் நாகேந்திரம் ஜெகதீஸ்வரன்**

பாசத்திற்கு இலக்கணமாய் அமைந்த
எம் அண்ணாவே
உங்களை நாம் அண்ணாவாகப் பெற
நாம் செய்த தவமே தவம்
எமக்கு வழிகாட்டியாய் நின்று
எமை உயரவைத்த அண்ணாவே
எம்மை விட்டுப் பிரிந்து ஏழாண்டு
உங்கள் நினைவுகளால் தவிக்கிறோம்!

*சந்தை வீதி,*
*சுன்னாகம்.*

**குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு

252 XXXX கைறூவ் டொல்பின் வான் விற்பனைக்குண்டு.

ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
18A, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## தையல் ஆள்கள் தேவை

சிறுவர் பெண்களுக்கான ஆடைகள் தைக்கத் தெரிந்தவர்கள் மற்றும் ஆடைகள் வடிவமைப்பு செய்யத் தெரிந்தவர்கள் 07.02.2009, 08.02.2009 ஆம் திகதிகளில் காலை 9.00 - 1.00 மணிவரை நேரில் வரவும். நா.நவரத்தினம், வேலழகன் ரெயிலரிங், கந்தசாமி கோவிலடி, இணுவில்.

## Intensive course in English and information Technology Under the IBG of the IRQUE Project

The inauguration of the above courses will be held at the kailasapathy Auditorium of the University of Jaffna on 14.02.2009 at 9.00am. All the students who have allready registered their names at the LTS office of the University of Jaffna to follow the above course are requested to be present without fail.

*Director / LTS*
*05.02.2009*

## உயர்தொழில் நுட்ப நிறுவன மாணவர்களுக்கான புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கான நிதி கிடைத்துள்ளதாக நிறுவகப் பணிப்பாளர் கே.கதிரமலை அறிவித்துள்ளார்.

புலமைப் பரிசில்களுக்குரிய மாணவர்கள் நிறுவன நிதிக் கிளையில் சமுகமளித்து உரிய ஆவணங்களில் கையொப்பம் இடுமாறு நிறுவனக் கணக்காளர் க.இராஜேஸ்வரன் கேட்டுள்ளார். (1)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியலட்சுமி பொன்னையா
(ஓய்வுபெற்ற நெசவு மேற்பார்வையாளர்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கிய லட்சுமி பொன்னையா (ஓய்வுபெற்ற நெசவு மேற்பார்வையாளர்) நேற்று (05.02.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருதப்பு பொன்னையா (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மருதப்பு தம்பதியினரின் அன்பு மருமகளும் இராசம்மாவின் அன்புச் சகோதரியும் பொன்னம்பலத்தின் மைத்துனியும் பாலலோஜினி (கனடா) காலஞ்சென்றவர்களான பாலசௌந்தரி, பாலச்சந்திரன் மற்றும் பாலதேவி (நெசவு போதனா சிரியர், பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்பு தாயாரும் சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), கோணேந்திரன், நளினி, விக்கினேஸ்வரன் (கஜமுகா ரேடர்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ராதிகா, றேணுகா, மேனகா, கங்கா, காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் நிசாந்தி, கோபிநாத், டினேஷ் (அவுஸ்ரேலியா), தர்மதா, அஜித்தா, ரம்பா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றொஷான், கேஷான், பொபினா, அஸ்வினி, வைஷ்ணவி, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் பத்மராணி, ஈஸ்வரன், தயாளன், சயந்தி ஆகியோரின் அன்பு பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2009) வெள்ளிக் கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ந.ப. 12 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3 ஆம் கட்டை,*
*கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.*

தகவல்:
பாலதேவி விக்கினேஸ்வரன் (மகள்).

### வல்லி இரத்தினம்



கம்பர் மலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி இரத்தினம் 03.02.2009 அன்று காலமானார்.

அன்னார் அருந்ததியின் அன்புக் கணவரும் ரஞ்சினிதேவி, இரத்தினராசா, இராஜினிதேவி, இரத்தினசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானச்சந்திரன், நந்தகுமார், சுதாகரன், லதாமேரி, செல்வரூபி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜீவலதா (ராதிகா), இன்ப சேகரன் (ரதன்), ஞனசீலன் (பிரான்ஸ்), கபில் நித்தியகல்யாணி, ஞானதர்சினி, சசிகுமார் நந்தினி, குமுதினி, அஜய்குமார், நிதர்சனா, ரக்ஷனா, சாள்ஸ்டாவின், ஸ்ரீபன், ரெக்சன், செல்ஷியா, ஆருத்திரா (லண் டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஹரிஸ்ராஜ், அபிநயா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன் தினம் (04.02.2009) புதன் கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*செல்வ விலாஸ்,*
*கம்பர்மலை.*

தகவல்:
வ.இரத்தினசிங்கம்
(மகன் - லண்டன்)

## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

யாழ்.மாவட்ட செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பின்வரும் வேலைகள் சம்பந்தமாக கேள்விப் பத்திரங்கள் பொருத்தமான கேள்விதாரரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

1. மாவட்ட செயலக புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்திற்கு வர்ணப் பூச்சு பூசுதல் (Painting)

2. மாவட்ட செயலக உணவுக் களஞ்சியங்களில் பொருள்கள் அடுக்கி வைக்க பயன்படுத்தப்படும் மரத்தட்டுக்கள் (Pallet) செய்தல்.

கேள்வி ஆவணங்களையும் ஏனைய தகவல்களையும் சாதாரண வேலை நாள்களில் காலை 9.30 மணி முதல் ந.ப. 12 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் 3.30 மணி வரையும் 10.02.2009 முதல் 18.02.2009 வரையும் புனர்வாழ்வுச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பெட்டி 18.02.2009 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு மூடப்படும். இதற்கு முன்னர் தங்களது பொறியிடப்பட்ட விண்ணப்பங்களை தலைவர், மாவட்டச் செயலக கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தின் கேள்விப் பெட்டியில் இடவேண்டும். அல்லது தபால் உறையில் இடது பக்க மூலையில் ஒவ்வொரு வேலைகளுக்கும் தனித்தனியே 'செயலகத்திற்கு வர்ணம் பூசுதல்', 'களஞ்சிய மரத்தட்டுக்கள்' என குறிப்பிட்டு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற் றுக்கொள்ளப்படமாட்டாது 18.02.2009 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளை கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து

விசேட விலைக் கழிவில்...
அப்பிள் (Top Red), ஓறேஞ் (Gan Nan Navel)

**02 அப்பிள் 01 ஓறேஞ் கொண்ட பொதிகள் விசேட விலைக்கழிவில் விற்பனைக்கு**

| | |
|---|---|
| சந்தை விலை | 225/= |
| பொதியிடப்பட்ட விற்பனை விலை | 150/= |

★ எமது கூட்டுறவு நகர் 1, 2 கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

★ இவ்விசேட விலைக்கழிவு விற்பனை கையிருப்பு உள்ள வரை மட்டுமே.

**(பாடசாலை மாணவர்கள் மற்றும் நோயாளர்களின் நலன்கருதி இவ் விசேட விலைக்கழிவு வழங்கப்படுகின்றது)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடியில் சுதந்திரதினக் கொண்டாட்டம்

நாவற்குழி,பெப்.6

இலங்கையின் 61ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் கைதடியில் நேற்றுமுன் தினம் சிறப்பாக நடைபெற்றது.

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் க.ஞானலிங்கம் தலைமையில் கைதடிச் சந்தியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.



மங்கள விளக்கினை கைதடியைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்களும், கைதடி சித்த மருத்துவத் துறையின் தலைவர் திருமதி ச.பஞ்சராஜாவும் ஏற்றி வைத்தனர்.

ஆசியுரைகளை போதகர் எஸ்.வசந்தகுமார் சிவாச்சாரியார், எஸ்.குருசாமி ஆகியோர் வழங்கினார்கள்.

தேசியக் கொடிகளை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய அதிபர் எஸ்.பவளகுமாரன், கைதடி வணி கர் சங்கத் தலைவர் க.குழந்தைவடிவேலு, தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் நா.சிவதிருச் செந்தூர்நாதர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

சிறப்புரைகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்டப் பிரதி அமைப்பாளர் சு.அலெக்சாண்டர் சாள்ஸ் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர். (203-288)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் விளக்கமறியல்.

மந்திகை,பெப்.6

சட்ட விரோதமாக மணல் ஏற்றிச்சென்ற இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

மணல் ஏற்றிச்சென்ற 'ஹன்ரரின்' சாரதியையும், உரிமையாளரையும் கைது செய்து மன்றில் ஆஜர்படுத்துமாறும் நீதிமன்றம் பொலிசாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பருத்தித்துறை புனித நகர் கடற்கரைப் பிரதேசத்திலிருந்து சட்ட விரோதமாக மணல் ஏற்றிய ஹன்ரர் வாகனத்தைக் கைப்பற்றிய பொலிசார் சட்ட விரோத மணல் ஏற்றியது சம்பந்தமாக துன்னாலையைச் சேர்ந்த ஜெயசிங்கம் சுதாகரன், தம்பிராசா தயாபரன் ஆகியோரையும் கைது செய்தனர்.

'ஹன்ரரை'ப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் பாரப்படுத்திய பருத்தித்துறைப் பொலிசார் சந்தேக நபர்கள் இருவரையும் மன்றில் ஆஜர் செய்தனர்.

இருவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்றம் உத்தரவிட்டது.

அத்துடன் சட்ட விரோதமாக மணல் ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட 'ஹன்ரர்' சாரதியையும், உரிமையாளரையும் கைது செய்து மன்றில் ஆஜர்ப்படுத்துமாறும் நீதிமன்றம் பருத்தித்துறைப் பொலிசாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. (203-218)

# சட்டவிரோத மின்பாவனை நீர்வேலியில் அதிகரிப்பு

கோப்பாய்,பெப்.6

நீர்வேலிப் பிரதேசத்தில் சட்டவிரோத மின்பாவனையாளர்கள் அதிகரித்துக் காணப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோத மின்னிணைப்பை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் மின் உபகரணங்கள் பழுதடையும் நிலைமையும் தோன்றியுள்ளது. உரிய அதிகாரிகள் விரைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (203-45)

# 'ஞானச்சுடர்' வாசகர்களிடையே நடத்திய போட்டி முடிவுகள் வெளியாகின

வடமராட்சி,பெப்.6

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் வாசகர்களிடையே நடத்திய போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று பரிசில்களையும் முறையே பாலகிருஸ்ணன் சஞ்சீவன் (அல்வாய்), கே.தேவதாஸ் (உடுப்பிட்டி), செல்வி கலையரசி சத்தியபாலன் (தெல்லிப்பழை) ஆகியோர் பெற்றுள்ளனர்.

ஆறுதல் பரிசில்களை, வித்தியாலோகநாதன் (உடுவில் மேற்கு), சிவநாதன் பகீரதன் (மயிலணி), உமாதர்சினி மகாதேவஐயர் (தொண்டைமானாறு), நிலானி சசிக்குமார் (சுதுமலை வடக்கு), சி.சிவனருள் கௌரி (உடுப்பிட்டி), வனஜா இராமலிங்கசர்மா (வண்ணார் பண்ணை), பிறேமினி ஜெயராசசிங்கம் (அல்வாய்), திருமதி க.சகுந்தலாதேவி (நல்லூர்), ஆ.நந்தினி (கொக்குவில்), திருமதி உமாராணி பேரானந்தம் (கொக்குவில்) ஆகியோர் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கானப் பரிசில்கள் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் 'ஞானச்சுடர்' மாசி மாத இதழ் வெளியீட்டு விழாவின்போது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (203-236)

# குளங்களின் தண்ணீர் மட்டம் வரட்சியால் வெகுவாகக் குறைவடைந்து செல்கின்றது

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.நகரப் பகுதிகளில் உள்ள குளங்களில் நீரின் மட்டம் வெகுவாகக்குறைந்து கொண்டே செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் காலநிலை வேறுபாடு, கடும் வரட்சி போன்ற காரணங்களாலேயே குளங்களில் நீரின் மட்டம் குறைவடைந்து செல்கிறது.

நகரை அண்டிய ஆரியகுளம், புல்லுக்குளம், தாமரைக்குளம், நரிக்குண்டுக் குளம் மற்றும் கொழும்புத்துறை இலந்தைக்குளம், நெடுங்குளம் ஈச்சமோட்டை மறவன்குளம், பால்குளம் போன்ற குளங்களில் நீரின் மட்டம் வெகுவாக குறைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு குளங்களில் நாளுக்கு நாள் நீர்மட்டம் குறைந்து செல்லும் நிலை காணப்படுவதால் கிணறுகளில் நீர்மட்டமும் குறைவடைய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (203-224)

# கலந்துரையாடல்

வடமராட்சி,பெப்.6

போரூட் நிறுவனத்தின் உதவியுடன் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், நண்பகல் 12 மணிக்கு கரவெட்டி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட ஆசிரியர்களுக்கும் சத்துணவு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு சத்துணவு வழங்கும் திட்டத்திற்குப் பொறுப்பான கரவெட்டிப் பிரதேசசபை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (203-236)

# கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம் மாணவர்களைக் கௌரவிக்கிறது

யாழ்ப்பாணம்,பெப்.6

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஜி.சீ.ஈ சாதாரணம் மற்றும் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கவுள்ளது.

சங்கத்தின் எல்லைப் பரப்பில் உள்ள மாணவர்களே இவ்வாறு பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்க அலுவலகத்தில் இடம்பெறும்.

சங்கத்தின் தலைவர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நிகழ்வில் 2007 ஆம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற மூன்று மாணவர்களும், 2008இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் பாராட்டி, பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதில் தமிழ்மொழி மூலம் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவன் த.பாசுபதனும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார். (203-224)

# செயலமர்வுகள்

வடமராட்சி,பெப்.6

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி, புவியியல் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள், நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலையிலும் புவியியல் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வுகளில் குறிப்பிட்ட பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார். (203-236)

# நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவவேண்டி வடமராட்சியில் திங்களன்று மஹாயாகம்

மந்திகை,பெப்.6

நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ வேண்டி பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற முதல்வி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை ''ஏகாதசருத்திர மஹாயாகம்'' நடைபெறவுள்ளது.


இதற்கான ஒழுங்குகளை முதல்வி அம்பாள் ஆலயத் தர்மகர்த்தா சபை மேற்கொண்டுள்ளது.

இந்த ஏகாதசருத்திர ஹோம அபிஷேக பெருஞ்சாந்தி விழாவில் பிரஜா விருத்தி (மழலைச் செல்வம்), திருமணம் நிறைவு ஆகியவற்றுக்கும் வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

அன்றையதினம் காலை 6 மணிக்கு நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சௌண் புண்ணியதானுவரத தேவக் குருக்களின் தலைமையில் மஹாயாகக் கிரியை ஆரம்பமாகும்.

பிரம்மஸ்ரீக்களான த.கணேசசபாபதிக் குருக்கள் (சுன்னாகம்), மு.சோமசுந்தரக் குருக்கள் (உரும்பிராய்), வ.நகுலேஸ்வரக் குருக்கள் (கல்வியங்காடு), சோ.வாகீஸ்வரக் குருக்கள் (ஊரெழு), கு.சரவணபவக் குருக்கள் (இணுவில்), கி.உமாசுதக் குருக்கள் (உரும்பிராய்), இ.நகுலேஸ்வரக் குருமணிக் குருக்கள் (நீர்வேலி), க.கேதீஸ்வரக் குருக்கள் (உசன்), மு.ஜெகன்நாத குருமணிக் குருக்கள் (உரும்பிராய்), சி.திலீபக் குருக்கள் (இணுவில்), நா.திவாகரக் குருக்கள் (உரும்பிராய்) ஆகியோர் இந்த மஹாயாகத்தை நடத்துவார்கள். (203-218)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்







தேசத்தைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தி அமைச்சினால் கரவெட்டி அந்திரான் பிரிவில் அமைக்கப்பட்ட மீள் எழுச்சித்திட்ட அலுவலகத் திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் யாழ்.பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.விஸ்வலிங்கம் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மீள் எழுச்சித்திட்டப் பணிப்பாளர் பி.எச்.சுகததாச உரையாற்றுவதையும் தேச நிர்மாண அமைச்சின் உதவிச் செயலாளர் எஸ்.சார்ங்கன், கரவெட்டிப்பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





ஐ.டீ.எம். கணனி நிறுவனத்தின் "டிஜிற்றல் சொலூசன்" நிறுவனத் திறப்பு விழா நேற்றுக் காலை 9.30 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள அவர்களது அலுவலகக் கட்டடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி கே.தேவராஜா மற்றும் சிறப்பு விருந்தினர்களாகக் [...]ந்துகொண்ட உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிறாணி மில்ஸ், தொழில் திணைக்கள உதவி ஆ[...]பாளர் சிவ.முத்துக்குமாரசுவாமி ஆகியோர் உரையாற்றுவதையும் -

[...]'கா ரெலிக்கொம்மின் பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவானந்தன், 'டிஜிற்றல் சொலூசன்' நிறுவன நிர்வாகி [...] ஜயக்குமார், எக்ஸ்போ ஏவியேசன் நிறுவன முகாமையாளர் கே.வசீகரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: ஓங்காரன்)

# விசர்ந[ா]ய்த் தடுப்பூசி போடுவிப்பது நாய் [வ]ளர்ப்பவர்களின் பொறுப்பு

**பொதுமக்கள[ின்] பாதுகாப்புக்காகவே மாநகர சபை செய்வதாகக் கூறுகிறார் ஆணையாளர்**

வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடுவதென்பதற்குச் சட்ட ரீதியான கட்டுப்பாடு ஏதும் இல்லை. மக்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களில் [இரு]ந்து அவர்களைப் பாதுகாக்கவே மாநகர சபை இந்த நடவடி[க்கையை] முன்னெடுக்கின்றது என்று தெரிவித்துள்ளார் யாழ்.மாநக[ர ஆணைய]ாளர் மு.செ.சரவணபவ.

[...]யில் நாவலர் வீதி முத்துத்தம்பி ஒழுங்கையில் விசர் நாய்க[்கடிக்கு] இலக்காகி ஒருவர் மரணமானது தொடர்பாகக் கேட்டபோதே ஆணையாளர் இக்கருத்தைக் கூறினார். மேற்படி சம்பவம் தொடர்பாக உதயனுக்குக் கிடைத்த முறைப்பாட்டுக் கடிதம் தொடர்பாக அவரிடம் கேட்டபோது -

வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி போடுவது தொடர்பாக முன்னதாகவே ஊசி போடப்படும் பகுதிகள், திகதிகள் குறித்து பத்திரிகைகள் மூலம் பொதுமக்களுக்குத் தகவல்கள் வழங்கப்படுவதுடன் ஒலிபெருக்கி மூலமும் அறிவிக்கப்படுகின்றது. தடுப்பூசி போடுவதற்குச் சட்டரீதியான கட்டுப்பாடு இல்லை எனினும் மக்களுக்கு இதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காகவே மாநகர சபை இந்த நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றது - என்றார்.

சம்பந்தப்பட்ட நாயின் உரிமையாளரிடம் இதுகுறித்து விசாரிக்கப்பட்டதாகவும் ஏ.ஆர்.வீ.தடுப்பூசி போடுவது தொடர்பான பத்திரிகை அறிவித்தல், ஒலிபெருக்கி மூலமான விளம்பரங்கள் அனைத்தையும் தாங்கள் பார்த்தும், கேட்டும் தெரிந்துகொண்டதாகவும் எனினும் தடுப்பூசி போடுவது பற்றிச் சிந்திக்கவில்லை எனவும் தெரிவித்தார் என்றும்-

வீடு வீடாகச் சென்று நாய்கள் பற்றிக் கேட்டுத் தடுப்பூசி போடுவது என்பது சாத்தியப்படாத ஒன்று. நாய்களை வளர்ப்பவர்கள் அதனை உரிய முறையில் பராமரிக்கவேண்டும். மாநகர சபையால் தடுப்பூசி ஏற்றப்படும் சமயம் அதனைத் தவறவிட்டாலும் பொதுவாக அது குறித்து விசாரித்து மேற்கொண்டும் ஊசி போடுவது தொடர்பில் அக்கறை காட்டவேண்டும்- என்று ஆணையாளர் கூறினார். (ப-111)




யாழ்ப்பாணம்,பெப்.6

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில், வடக்குக் கிழக்கு மாகாண உதவிக் கணக்காய்வாளர் நாயகம் எஸ்.கனகசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

திருமதி றஞ்ஜினி கனகசிங்கம் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கவுள்ளார். (204)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.6

மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி கௌரி மனோகரி கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.6

கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், சிறப்பு விருந்தினராக 'நிக்கொட்' நிறுவன உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வி.சொக்கநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (9)

* * *

தொல்புரம்,பெப்.6

தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் மு.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு வலி.மேற்குப் பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் திருமதி பானுமதி இரவீந்திரன் முதன்மை விருந்தினராகவும், பழைய மாணவர் சங்க உபதலைவர் ச.திருச்செல்வம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (203-119)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.6

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சண்டிலிப்பாய் பிரிவில் புதிய கணனிப் பயிற்சிநெறி ஆரம்பித்தலும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் மாணவர்களுக்குச் சான்றிதழை வழங்கவுள்ளார்.

கற்கை நெறியினைப் பூர்த்திசெய்த அனைத்து மாணவர்களையும் இந்த நிகழ்விற்கு வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

* * *

நாவற்குழி,பெப்.6

மூத்த பிரஜைகளின் சேவையாளர்கள் செயலமர்வின் இறுதி நாள் நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குச் சமூகநலத்துறைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் ஆ.ஞானவேல் தலைமையில் சுண்டுக்குளி பிளச்சஸ் ஒழுங்கையிலுள்ள வளர்பிறை மண்டபத்திலே நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு விருந்தினர்களாகப் பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், நிக்கொட் மாவட்ட பதில் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன், யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர். (203-288)

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் ஸ்ரீ கனகசுந்தரலிங்கம் (சுந்தரம்)

**(சுந்தரம் ஸ்ரோர்ஸ் - அப்புத்தளை)**



காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் அப்புத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஸ்ரீ கனகசுந்தரலிங்கம் 04.02.2009 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோம சுந்தரம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் செந்தில்குமாரின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும் அருளானந்தம் (அப்புத்தளை), இராசேந்திரம் (பிரான்ஸ்), திருநாவுக்கரசு (பிரான்ஸ்), நாகேஸ்வரி (பண்டாரவளை), லோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சோதிமலர் (அப்புத்தளை), இராஜேஸ்வரி (பிரான்ஸ்), லதா (பிரான்ஸ்), கணேசன் (பண்டாரவளை), சிவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்குக் கல்கிசை பொதுமயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குறிப்பு:* அன்னாரின் துக்கநிகழ்வுகள் கோவளம், காரைநகரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது.

இல.09, 1/1, உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை.
T.P. 011 2361561 (82460)

தகவல்:
க.ஈஸ்வரி, சி.விக்கினேஸ்வரி (சகோதரிகள்).
கோவளம், காரைநகர்.

### மார்க்கண்டு ஜெகதாம்பிகை



நிச்சாமம், சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஜெகதாம்பிகை 03.02.2009 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் சுரேஸ்குமார், ராதா, செல்வம், ரமனி அம்மா, சதீஸ்குமார், விஜிதா ஆகியோரின் தாயும் சர்மிலா, விமலபாலச்சந்திரன், பாலச்சந்திரன், சாந்தா, வேல்விழி ஆகியோரின் மாமியும் டெலானி, யோரல், செரீனா, ரெசிங்கா, சாருஜன், விதுசன், தர்சன், சுகன்ஜா, தனுஜன், தசாந், தாட்சாயினி, அஸ்வினி, சாம்ரூன், சாதுரி, பிரானன், அபினயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிச்சாமம், சங்கானை மேற்கு,
சங்கானை. (82462)

குடும்பத்தினர்.

**விற்பனைக்கு**

L.G. இரட்டைக் கதவு குளிர்சாதனப் பெட்டி (Fridge), SISIL- R 80 குளிர்சாதனப் பெட்டி என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு இல. 25, ஸ்ரேசன் றோட், கொக்குவில்.

**யோகம் தரும் இயற்கை வைத்தியம்**

இந்திய முறைப்படி,
மூலிகை எண்ணெய் வைத்தியம்

மாறாத பழைய நோக்கள், தீராத தலைவலி, விறைப்பு மற்றும் குத்து உளைவு, வாதம் சம்பந்தமான அனைத்து நோய்களுக்கும் மருந்துகள் பயனளிக்காதவர்களும் நம்பிக்கையுடன் தொடர்புகொள்ளவும்.

*தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்:*

மதவடி, வாசிகசாலை, 021 2264694
சுன்னாகம். 0774521392

[...] கிராமக்கோடு
புலோலி, பருத்தித்துறை. (80263)

## முதலாம் வருட நினைவில்

### அமரர் றோமான் மனுவல்



தோற்றம்
24 * 10 * 1935

மறைவு
06 * 02 * 2008

காலங்கள் மாறும் கவலைகள் தீரும்
தீராது உம் பிரிவு எம் மனதை விட்டு
மின்னும் பல்லுடன் கூடிய சிரிப்பு
மிதமாக கூடிக் கதைத்திடும் பாங்கு
அனைவரையும் அரவணைக்கும் உள்ளம்
அனைத்தும் இழந்து தவிக்கின்றோமையா.

என்றும் நினைவுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.03, அடப்பன் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (சி/557040)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா கண்மணி



வராம்பற்றை, கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கண்மணி நேற்று (05.02.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி கந்தையாவின் அன்பு மனைவியும் நாகம்மாள் (ஓய்வுபெற்ற ஆசிரியர், ஸ்ரீகணேச வித்தியாசாலை, சரசாலை), இரத்தினம் (ஓய்வுபெற்ற ஊழியர், விவசாயப் பாடசாலை, திருநெல்வேலி), நடராசா (முன்னாள் விவசாயப் போதனாசிரியர், ஜேர்மனி), பரமேஸ்வரி (பொம்மை - ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், நகர சபை, சாவகச்சேரி), அமரர் கமலேஸ்வரி மற்றும் செல்வரஞ்சி (விவசாயப் போதனாசிரியர், விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி), குகதாசன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான இராசையா, துரைச்சாமி, இராசரத்தினம் மற்றும் தனலட்சுமி, லலிதா, அருமைத்துரை, யோகேஸ்வரன், ஜெயராஜகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கிழக்கு ஆலடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, கோண்டாவில் சந்தி,
கோண்டாவில் கிழக்கு,
(ராஜா பிளாசா முன்பாக). (82467)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித் துறைக்கும் பெருமை சேர்த்த மாணவீகளின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

## சைந்தவி ஜெயராமன்
### பெறுபேறு: 3ஏ (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)



எனது ஆரம்பக்கல்வியை யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையிலேயே கற்றேன். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் நான் சித்தியடையவில்லை. பின்னர் தரம் 6இலிருந்து உயர்தரம் வரைக்கும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலேயே கற்று வந்தேன். க.பொ.த. சாதாரண தரத்தில் 7ஏபி2சி பெறுபேற்றைப் பெற்றேன்.

பரீட்சைக்குப் படிக்கும்போது மின்சாரம் தடைப்படுவது மட்டும்தான் எனக்குச் சிக்கலாக இருந்தது. எனினும் சோர்வடையாது உற்சாகமாகப் படித்துப் பரீட்சையை எதிர்கொண்டேன்.

சிறப்பான பெறுபேற்றைப் பெறுவதற்கு என்னை எவ்வளவுக்கு கல்வியில் ஈடுபடுத்தமுடியுமோ அவ்வளவுக்கு ஈடுபடுத்தி உச்ச இலக்கை அடைவதற்காக விடாமுயற்சியாகப் படித்தேன். ஞாபகத்தில் இருக்கவேண்டிய விடயங்களை அதிகாலையில் தான் படித்தேன். எனக்குப் படிப்பதற்கென்று மூன்று பாடங்களுக்கும் சமஅளவு நேரத்தை ஒதுக்கி நேரஅட்டவணை ஒன்றை ஆசிரியர் தயாரித்து வழங்கினார். அதனையே பின்பற்றிப் படித்தேன். பரீட்சை நெருங்கிய இரண்டு மாதங்களிலும் பகல், இரவு பாராமல் படித்தேன். அத்துடன் அதிகளவு பயிற்சிப் பரீட்சைகளிலும் தோற்றினேன். இவ்வாறு எனது கடின உழைப்பால் உச்ச பெறுபேற்றைப் பெற்றதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

3ஏ வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் மாவட்ட மட்டத்தில் முதல் பத்து நிலைகளுக்கு உள்ளே வருவேன் என்று சற்றுக்கூட எதிர்பார்த்திருக்கவே இல்லை.

எங்களால் எந்தப் பாடத்துறையில் நல்ல தேர்ச்சியைப் பெறமுடியுமோ அந்தப் பாடத்துறையைத் தான் தெரிவுசெய்யவேண்டும். இதற்கமைய என்னால் வர்த்தகத் துறையில் நல்ல தேர்ச்சியைப் பெறமுடியும் எனத் தோன்றியமையால் வர்த்தகத்துறையைத் தெரிவுசெய்தேன்.

எனது இந்த வெற்றிக்குப் பலமாக இருந்தவர்கள் பலர். முதலில் நான் வணங்கும் கடவுள்தான் காரணமாவார். அம்மா, அப்பா, சகோதரன், சகோதரி, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், உறவினர்கள் மற்றும் ஆருயிர் நண்பர்கள் இவர்கள் தந்த ஊக்கமும், அறிவுரைகளுமே எனது இந்த வெற்றிக்குக் காரணமாகும். எனவே என்னை இந்த நிலைக்கு உள்ளாக்கியவர்கள் அனைவருக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்காலத்தில் நான் வங்கித்துறையில் ஈடுபட்டுச் சிறந்த ஒரு வங்கியாளராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம். எனது இலட்சியத்தை அடைந்து வறியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதும் என் விருப்பம்.

## கார்த்திகா அருமைநாயகம்
### பெறுபேறு: 2ஏபி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)



யா/நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று, தரம் 6இல் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இணைந்தேன்.

நான் கலைப்பிரிவில் தமிழ், பொருளியல், அளவையியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். நான் மூன்று பாடங்களுக்கும் சம அளவு நேரத்தை ஒதுக்கி கடந்த கால வினாப் பத்திரங்களை நண்பிகளுடன் சேர்ந்தும் கற்றேன்.

எனது வீட்டில் இரு சகோதரர்கள் கணிதப் பிரிவில் கற்பதனால் நான் கலைத்துறையில் பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற குறிக்கோளுடன் கற்றேன். பரீட்சையினை சிறப்பாக எழுதியதால் இப்பெறுபேற்றினை எதிர்பார்த்தேன். எனினும் பாடங்களின் பெறுபேறுகள் எதிர்பார்த்ததை விட மாறி அமைந்திருந்தன.

நான் சிறப்பான பெறுபேற்றினைப் பெறுவதற்கு எனது பெற்றோர், சகோதரர்கள் எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பிகள் அனைவரும் ஊக்குவித்து உறுதுணையாக இருந்தனர்.

பரீட்சையின்போது எல்லாப் பகுதிகளையும் படித்ததால் நான் எதிர்பார்த்த வினாக்கள் வந்தன. இது எனது பெறுபேற்றினை சிறந்ததாக பெற்றுக் கொள்ள உதவியது. எனக்கு ஊக்கமளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு இறைவனுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**சந்திப்பும், படங்களும்: ஔண்யன், கவிநேசன், லக்ஸ்மன், குமரன். 13**

## மு.தயாபரன்
### பெறுபேறு: 3ஏ (மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)



க.பொ.த. சாதாரண தரத்தில் பெற்ற பேறுபேற்றினால் [2ஏ2பி5சிஎஸ்] எனது நண்பர்களின் தூண்டுதலுடன் உயர்தர கணிதப் பிரிவில் கல்வி கற்றேன். ஒரு வருடக் கற்றலில் கணித பாடங்கள் கடினமாக இருப்பதை உணர்ந்து அடுத்து வருடமே கலைப்பிரிவுக்கு மாறிவிட்டேன். ஒரு வருடத்தில் கற்றுமுடிக்கவேண்டுமென்பதற்காக அளவையியல், நாடகமும் அரங்கியலும், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்தேன்.

பாடசாலையில் அதிபரும் எனது ஆசிரியர்களான திரு.சயந்தன், திருமதி உஷா புஷ்பராஜா, திருமதி பகீரதி கணேசதுரை ஆகியோரும் எனக்கு உறுதுணையாக இருந்து வழிகாட்டினர். எனது தாயும் எனது படிப்பில் அக்கறை காட்டினார். தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் வழிகாட்டினர். அதனால் இப்பெறுபேற்றை அடையமுடிந்தது.

எனது குடும்பம் வறுமைநிலையிலுள்ளது. தந்தையார் விவசாயி. வருமானம் குறைவு. நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையால் உபகாரப் பணம் கிடைத்தது. மாமா, சித்தப்பா ஆகியோரது உதவிகளும் கிடைத்தன.

நான் தொடர்ந்து படிப்பதில்லை. இறுதி ஆறு மாதங்களும் கவனமெடுத்துப் படித்தேன். காலையில் ஒரு மணித்தியாலமும் இரவில் இரு மணித்தியாலயங்களும் படிப்பேன். பல்கலைக்கழகத்தில் தத்துவப் பாடத்தைப் படிக்க விரும்புகிறேன். எதிர்காலத்தில் ஆசிரியராக வரவே விரும்புகிறேன்.

## அமலசிங்கன் றில்வன்
### பெறுபேறு: 3ஏ (மானிப்பாய் இந்துக் கல்லூரி)



உயர்தரத்தில் கிறிஸ்தவ நாகரிகம், தமிழ், புவியியல்போன்ற பாடங்களைத் தெரிவு செய்தேன். எங்கள் வீட்டில் யாருமே படிக்கவில்லை. ஆதலால் நான் நல்லமுறையில் படிக்கவேண்டும் என்ற மனவைராக்கியத்துடன் படித்தேன். 3ஏ பெறுபேற்றினை மிகவும் எதிர்பார்த்தேன்.

அண்ணா கட்டாரில் நின்று எனது படிப்புச் செலவினையும் கவனித்து கவனமாகப் படிக்க வேண்டும் என்ற உற்சாகத்தையும் தந்தார்.

கல்லூரியின் அதிபர் சிவநேஸ்வரன் மற்றும் பாட ஆசிரியர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் என்னை வழிநடத்தினார்கள். இரவுநேரங்களில்தான் அதிகம் படித்துக்கொள்வேன். இசைத் துறையில் அதிக ஈடுபாடு உள்ளது.

எதிர்காலத்தில் புவியியல் ஆய்வாளராக வரவேண்டும் என்ற இலட்சியம். நிச்சயம் அதிலும் சாதிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

## கிறேஸ் பபியோலா
### பெறுபேறு: 2ஏபி (நெடுந்தீவு றோ.க. பெண்கள் கல்லூரி)




நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழல் காரணமாக 1990இல் நாங்கள் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து புதுக்கோட்டை அகதிகள் முகாமில் தங்கியிருந்தோம். அங்குள்ள திரு இருதய மகளிர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். பெற்றோர் மீண்டும் 2004இல் இங்கு திரும்பவும் வந்தனர். நான் இங்கு மத்தி றோ.க.மகளிர் கல்லூரியில் சேர்ந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சை எடுக்கும் வரை எனது கல்வியைத் தொடர்ந்தேன். வீட்டில் எனது தாயாருக்கு உதவுகின்றபோதும் படிக்கும்போதும் முழுக்கவனத்தையும் அதில் செலுத்தினேன். வீட்டைப் பொறுத்தவரை எனது கல் விக்கு எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில் உற்சாகமளித்தனர். தமிழ், அரசியல், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களில் நான் சிறப்பாகச் சித்தியடைய எங்கள் கல்லூரி அதிபர் அருட்சகோதரி ஜசிந்தாராணி அந்தோனிப்பிள்ளையும் ஆசிரியர் யூட்ஸ்கிங் ஆகியோர் முக்கிய காரணமாக இருந்தார்கள். இவர்கள் அளித்த உற்சாகமும், ஊக்கமும் மறக்கமுடியாதது.

பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளிலும் பாடங்கள் தொடர்பாக ஏற்படக்கூடிய சந்தேகங்களையிட்டு சிறப்பான விளக்கங்களை வழங்கியதுடன் தங்களது வேலைகளைக் கூட ஒதுக்கிவிட்டு வீட்டிற்கு வந்தும் பாடங்கள் குறித்த அறிவுரைகளை வழங்கி வந்துள்ளனர். இதனால் எனக்கு தனியார் கல்வி நிலையங்களை நாடவேண்டிய தேவையே இல்லாமல் போய்விட்டது. எனது தந்தையார் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர். அப்பா கஷ்டமான சூழ்நிலையிலும் தன்னால் முடிந்த உதவிகளை என் கல்வித் தேவைக்காகச் செய்துவந்தார். க.பொ.த.சாதாரண பரீட்சை சித்தியடைந்ததும் கல்வி அமைச்சு இலங்கை வங்கியூடாக உதவியிருந்தது. கல்வியுடன் விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொண்டு சான்றிதழ்கள் பல பெற்றிருக்கிறேன் - எதிர்காலத்தில் அரசியல் வாதியாக வரவேண்டும் என்பதுதான் எனது முதல் லட்சியம். மக்களின் குறைபாடுகளைக் களைந்து, அவர்களது வாழ்க்கையும் எதிர்காலமும் சிறப்பாக அமைய ஒரு நல்ல நேர்மையான அரசியல்வாதி தேவை என்று கருதுகிறேன். இப்படியான ஒரு மக்கள் பிரச்சினைகளைத் தீர்வு கண்டு உதவக்கூடிய ஒன்றாக, அரசியல்வாதியாக மக்களுக்குச் சேவையாற்றவேண்டும் என்பதே எனது விருப்பம்.



தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயில் வைரவர் ஆலயத்தில் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய அறநெறிப் பாடசாலையின் நெறிப்படுத்தலில் திருவாசக மணி மு.மருதபிரான் தலைமையிலான ஓதுவார் குழுவினர் திருவாசகம் முற்றோதல் செய்யும்போது எடுக்கப்பட்ட படம். (236)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற 63 நாயன்மார் குரு[illegible] அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதையும் ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுத[illegible] தாஸ் சுவாமிகள் ஒழுங்குகளைப் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)

## இல்லறத்தாலும் இறைபணி செய்யின் மோட்சம் பெறலாம்

### ஞானக்கதிர்

இல்லறத்தில் நிற்போரும் இல்லறத்தில் இருக்கும்போதே, தாமரை இலையில் நீர் அத்தாமரை இலையில் இருக்கும்போதே, அதனோடு பற்றுதலற்று இருக்குமாறு போல, பற்றற்றிருக்க வல்லவராயின் அவர்களும் துறவிகள் ஆவர். துறவிகளிற் சிறந்தவருமாகலாம். வேதத்தோடொத்ததாகிய திருக்குறளை உலகுக்கருளிய தெய்வப் புலவராகிய திருவள்ளுவர், இல்லறத்தில் நின்றொழுகியவராயினும் ஒரு மேலான துறவியே. ஜனகமகாராசனும் அங்ஙனமே இவர்களது வாழ்வு இல்லறத்தாருக்கு நல்ல வழி காட்டியாகும்.

மேலும் இல்லறத்தில் இருந்துகொண்டு தத்தமக்கேற்ற தொழில்புரிந்து வாழ்ந்தவர்களும், சிவப்பணிகளில் ஏதாவதொன்றை இறுகப்பற்றி நின்றதனால் திருவருட் பேற்றுக்கு ஆளாயினர் என்று பெரியபுராணம் கூறுகின்றது. இதனை இல்வாழ்வுடையோர், சிந்தித்து, தெளிந்து கடைப்பிடிப்பார்களாயின் மேலான நன்மை பெறுவர். சிவாலய தரிசனம், சிவாலயசேவை, குரு, சிவனடியார் ஆகிய கண்கண்ட தெய்வங்களைத் தரிசித்தல், அவர்களுக்குச் சேவை செய்தல் ஆதியன சிவபுண்ணியங்கள்; மோட்சம் தருவன. நல்லவர்களோடு சேருதல் எப்போதும் நன்மையே தரும். தீயவர்களோடு சேருதல் எப்போதும் தீமையே தரும்.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்"

என்ற தேவாரம் எங்களுடைய மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களும் என்ன செய்வதற்கு எங்களுக்கு இறைவனால் தரப்பட்டன என்பதைச் சுருக்கமாக விளக்குகின்றது. "தலையே நீ வணங்காய்" என்று தொடங்கும் திருவங்கமாலை, எமது உடலின் கண்ணுள்ள உறுப்புக்கள் செய்யத்தக்கன இவை என்று தெளிவாகக் கூறுகின்றது. இவற்றை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இல்லிக் குடத்துள் நீரை விட்டால், அந்நீர் அதனிலிருந்து ஒழுகிப்போவது ஆச்சரியமன்று. அதனுள் ஒழுகாமல் நிற்பதே ஆச்சரியம் தரும். ஒன்பது துவாரமுடைய எம்முடம்புள் உயிர் நிற்பதுதான் ஆச்சரியம்; உடம்பை விட்டுப்போவது ஆச்சரியமன்று. நம்முயிர் பிரியுமுன் நல்லதைச் செய்வோம். ஓரிடத்துக்கு ஒரு காரிய நிமித்தம் செல்லும் ஒருவன் இடைவழியில் நிகழும் வேடிக்கைகளிற் கவனமின்றி அவற்றைச் சும்மா பார்த்துக்கொண்டே செல்லுமாறு போல, மோட்சத்துக்குச் செல்லும் வாழ்வு நெறியிற் செல்லும் நாமும் இடையில் நிகழும் நிகழ்ச்சிகளில் கவனமின்றிச் சும்மா பார்த்துக்கொண்டே செல்லுவோம். நெஞ்சில் அவன் நினைவே நிலைக்கட்டும்.

"நின்றும் இருந்தும், கிடந்தும் நினைநெஞ்சே
என்றும் அவன் தாள் இணை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தின் மகுடம் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 6

'ஒருதாய் பிள்ளை' என்ற தலைப்பில் நேற்று முன் தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 'தேசத்தின் மகுடம்' கண்காட்சி ஆரம்பமானது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இக்கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கண்காட்சி இம்மாதம் எட்டாம் திகதிவரை நடைபெறும். காலை 9 மணிமுதல் இரவு 12 மணிவரை இதனைப் பார்வையிடலாம் என்று கண்காட்சி ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

இந்தக் கண்காட்சியின் முதலாவது நாள் பாதுகாப்பு தினமாகவும் இரண்டாவது நாள் கலாசார தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியை ஒட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று கண்காட்சி ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களும் அவர்களுடன் வரும் ஆசிரியர்களும் இக்கண்காட்சியை இலவசமாகக் கண்டு மகிழலாம் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (சி)

# மத்திய கிழக்கில் இன்னற்பட்ட 90 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, பெப். 6

மத்திய கிழக்கு நாடுகளில் பல இன்னல்களை எதிர்கொண்டு அங்குள்ள இலங்கைத் தூதரகங்களில் தஞ்சம் புகுந்த இலங்கைத் தொழிலாளர்கள் 90 பேர் நேற்று முன்தினம் அரச செலவில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

காலை 5 மணிக்கு மூன்று விமானங்கள் மூலம் இவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர் என்று இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்தது.

அழைத்து வரப்பட்ட 90 பேரில் 71 பேர் ஆண்கள் என்றும் 19 பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் தங்களது வீடுகளுக்குச் செல்ல இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் அவர்களுக்குப் பணம் வழங்கியது என்றும் அப்பணியகம் தெரிவித்தது.

இவ்வாறான இன்னல்களை எதிர்நோக்கும் தொழிலாளர்கள் தொடர்பாக மேலும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் கூறியது. (சி)

## ஆங்கிலப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தோர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், பெப்.6

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் ஆங்கிலப் பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக் கப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தமது பரீட்சைப் பெறுபேற்றின் பிரதியினை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள 'விமலாஸ்' வர்த்தக நிலையத்தில் ஒப்படைக்குமாறு கழகச் செயலாளர் லயன் எஸ்.கே.நவரத்தினம் அறிவித்துள்ளார்.

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தி பெற்ற மாணவர்களும், ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களும் இப்பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (203-207)

## தென்மராட்சிப் பிரதேச கிணறுகள் துப்புரவு

யாழ்ப்பாணம், பெப்.6

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பொதுக் கிணறுகளைச் சர்வதேச நிவாரண மற்றும் அபிவிருத்தி நிறுவனம் இறைத்து துப்புரவு செய்து வழங்கவுள்ளது.

'நிஷா' புயல் மற்றும் பெருமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பாவிக்கும் சுமார் 30 கிணறுகளை இந்த நிறுவனம் துப்புரவு செய்து பொதுமக்கள் பாவனைக்கு விட்டுள்ளது என அந்த நிறுவ்னத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார். (203- 131)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,பெப்.6

புங்குடுதீவு மகா வித்தியாலய (வகை 1சி) அதிபர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு தீவக வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோரை தீவக வலயக் கல்வி பணிமனையில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி வலயக் கல்வி. அலுவலகத்திற்குஅனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வி. இராதகிருஸ்ணன் அறிவித்துள்ளார். (201)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர்
திரு.வி.தர்மசீலன் அவர்களின் தாய்
திருமதி வில்லியம் இராசம்மா
அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நவாலி அட்டகிரி
சைவ வித்தியாசாலை. (82456)
அதிபர்,
ஆசிரியர்கள்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி பெனிற்றா
கல்யாணி லோறன்ஸ்

மலர்வு: 21.03.1967

உதிர்வு: 06.02.1999

ஆண்டவரே நீர் குடிகொள்ளும் இல்லத்தில்
நான் விரும்பி வாழ்வேன் உமது மாட்சி
தங்கியுள்ள இடத்தில் என்றென்றும் வாழ்வேன்.
(திருப்பாடல் 26.8)

இல.128 சப்பல் வீதி,
யாழ்ப்பாணம். (82444)
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



செல்வி நாகம்மா கதிர்காமர்
(இளைப்பாறிய இசை ஆசிரியை, யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

சர்வதாரி வருடம் மார்கழி மாதம் 22 ஆம் நாள் (07.01.2009) சிவபதமெய்திய எமது சங்கீத ஒளி அமரர் சங்கீத பூஷணம், திருமுறைப் பண்ணிசைச் செல்வி, இன்னிசைக் கலாநிதி செல்வி நாகம்மா கதிர்காமர் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, திருமுறைப் பண்ணிசை ஓதல் நாளை (07.02.2009) சனிக்கிழமை காலை 9 மணிக்கு எமது இல்லத்தில் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் மதிய போசனமும் நடைபெறும். எனவே மேற்படி இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆறுமுகம் வீதி,
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம். (82410)
ந.திருவடி குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



ஒளிர்வு:
03.01.1948

அணைவு:
07.01.2009

அமரர் பத்மாவதி உருத்திரன்

"பாசத்தால் பண்பு படைத்து
நேசத்தால் வையமணைத்தீர்
ஆண்டு நூறு சென்றாலும்
நிலைத்திருப்பீர் எம் மனதில்"

07.01.2009 அன்று அணைந்த எமது குடும்ப விளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (06.02.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"திருத்தணி",
ஜெற்மோட்டர்ஸ் அருகில்
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். (82433)
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் ஆண்டி
முருகையா

மண்ணில்
25.12.1935

விண்ணில்
07.01.2009

அன்பிற்கும் பண்பிற்கும் இனியவராய்
எம்மைப் பாசத்தோடு வளர்த்தீர்கள்
துடிதுடிப்பான உங்கள் செயல்களால்
எம்மைப் பாரினில் உயர்த்தினீர்கள்
கள்ளங்கபடமற்ற உங்கள் செயல்களால்
பாரினில் பலரைக் கவர்ந்தீர்கள்
பரிதவிக்கின்றோம் உங்களை இழந்து
மறந்து விடோம் எம் உயிர் இருக்கும் வரை
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 07.01.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.02.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும்அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்துகொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

என்றும் உம் நினைவுடன்:
தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு, இணுவில். (82432)
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நினைவலைகள்

முதலாம் ஆண்டு இரண்டாம் ஆண்டு



திதி:06.02.2009



அமரர் அ.நடராஜா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

செல்வி ந.கலைவாணி
(ஆசிரியை)

17.06.1930 மலர்வு 28.02.1967
19.01.2008 உதிர்வு 01.01.2007

ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா! தேறுதல் சொல்ல தெய்வமே வந்தாலும் உங்கள் திருமுகம் ஒருதரம் காண்பதற்கு ஈடாகுமா! நீங்காது உங்கள் நினைவலைகள் நிலையாக எம் மனதில் வாழ்கின்றன. ஆத்மா சாந்திபெற அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (82412)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 3

சுடர் சிந்தனை :- " நம்பிக்கை என்பது வாழ்க்கையின் ஊன்றுகோல் "

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

## இலகுவழி ஆங்கிலம்
## EASY WAY TO ENGLISH

BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond)
Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)

## Last week continuity.....

### 2nd Person - Singular - Simple Future Tense.
### முன்னிலை - ஒருமை - சாதாரண எதிர்காலம்.

1. You will eat
நீ சாப்பிடுவாய்
நீங்கள் சாப்பிடுவீர்கள்
2. You will sing
நீ பாடுவாய்
நீங்கள் பாடுவீர்கள்
3. You will read
நீ படிப்பாய்
நீங்கள் படிப்பீர்கள்
4. You will sleep
நீ நித்திரை செய்வாய்,
நீங்கள் நித்திரை செய்வீர்கள்.

> ஞாபகக் குறிப்பு:
> You என்பது நீ, நீங்கள் என்னும் இரண்டுக்கும் வருவதானால் எதிர்கால சாதாரண வாக்கியத்தில் will எனும் துணைவினைச்சொல் பிரதான வினைச்சொல்லுடன் இணைந்து ஒருமை, பன்மையாக வரும்.

### 3rd Person - Singular - Simple Future Tense.
### படர்க்கை - ஒருமை - சாதாரண எதிர்காலம்.

1. He will eat
அவன் சாப்பிடுவான்
She will eat
அவள் சாப்பிடுவாள்
It will eat
அது சாப்பிடும்
2. He will sing
அவன் பாடுவான்
She will sing
அவள் பாடுவாள்
It will sing
அது பாடும்
3. He will read
அவன் வாசிப்பான்
She will read
அவள் வாசிப்பாள்
It will read
அது வாசிக்கும்
4. He will sleep
அவன் நித்திரை செய்வான்
She will sleep
அவள் நித்திரை செய்வாள்
It will sleep
அது நித்திரை செய்யும்

இனிமேல் நடக்கப் போகின்ற செயற்பாட்டைச் சொல்லுவது எதிர்கால வாக்கியமாகும். கீழ்க்காணும் வாக்கியங்களைப் பார்ப்போம்.

1. I will eat
நான் சாப்பிடுவேன்
2. I will read
நான் வாசிப்பேன்
3. I will sing
நான் பாடுவேன்
4. I will sleep
நான் நித்திரை செய்வேன்

> ஞாபகக் குறிப்பு:
> சாதாரண எதிர்காலத்தில் வாக்கிங்கள் அமையும்போது I எனும் சொல்லுடன் will என்பதையும் வினைச்சொல்லுடன் இணைக்கப் படும்.

### 1st Person - Plural - Simple Future Tense.
### தன்மை - பன்மை - சாதாரண எதிர்காலம்.

1. We will eat
நாங்கள் சாப்பிடுவோம்.
2. We will read
நங்கள் வாசிப்போம்
3. We will sing
நாங்கள் பாடுவோம்
4. We will sleep
நாங்கள் நித்திரை செய்வோம்

> ஞாபகக் குறிப்பு:
> எதிர்கால சாதாரண வாக்கியத்தில் ஒருமை வாக்கியத்திற்கும், பன்மை வாக்கியத்திற்கும் will எனும் துணை வினைச்சொல் பிரதான வினைச்சொல்லுடன் இணைக்கப்படும்.

### 3rd Person - Plural - Simple Future Tense.
### படர்க்கை - பன்மை - சாதாரண எதிர்காலம்.

1. They will eat
அவர்கள் சாப்பிடுவார்கள்
2. They will read
அவர்கள் வாசிப்பார்கள்
3. They will sing
அவர்கள் பாடுவார்கள்
4. They will sleep
அவர்கள் நித்திரை செய்வார்கள்

> ஞாபகக் குறிப்பு:
> சாதாரண எதிர்கால வாக்கியங்களில் அவை தன்மை, முன்னிலை, படர்க்கையாகவோ அல்லது ஒருமை பன்மையாகவோ வரும்போது அல்லது Will எனும் துணைவினைச்சொல் பிரதான வினைச் சொல்லுடன் I, We, He, She, It, You, They இணைந்து வரும்.

### Future Continuous Tense
### எதிர்காலத் தொடர்

These future continuous tense sentences indicate actions as going over a period of time and will end in the near future.

இவ் எதிர்காலத் தொடர் வாக்கியமானது ஒரு செயற்பாடு நடந்து கொண்டிருப்பதையும், அது அண்மையில் முடியும் என்பதையும் குறிக்கும்.

| Number<br>எண் | First Person<br>தன்மை | Second Person<br>முன்னிலை | Third Person<br>படர்க்கை |
|---|---|---|---|
| Singular<br>ஒருமை | I will be eating<br>நான் சாப்பிட்டுக் கொண்டிருப்பேன் | You will be eating<br>நீ சாப்பிட்டுக் கொண்டிருப்பாய் | He will be eating<br>அவன் சாப்பிட்டுக் கொண்டிருப்பான் |
| Plural<br>பன்மை | We will be eating<br>நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருப்போம் | You will be eating<br>நீங்கள் சாப்பிட்டுக் கொண்டிருப்பீர்கள் | They will be eating<br>அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள் |

### Example Sentences
### உதாரண வாக்கியங்கள்

### 1st Person - Singular - Future Continuous Tense
### தன்மை - ஒருமை - எதிர்காலத் தொடர்

1. I will be eating
நான் சாப்பிட்டுக்கொண்டிருப்பேன்
2. I will be reading
நான் வாசித்துக்கொண்டிருப்பேன்
3. I will be singing
நான் பாடிக்கொண்டிருப்பேன்
4. I will be sleeping
நான் நித்திரை செய்துகொண்டிருப்பேன்

### 1st Person - Plural - Future Continuous Tense
### தன்மை - பன்மை - எதிர்காலத் தொடர்

1. We will be eating
நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருப்போம்
2. We will be reading
நாங்கள் வாசித்துக்கொண்டிருப்போம்
3. We will be singing
நாங்கள் பாடிக்கொண்டிருப்போம்
4. We will l-e sleeping
நாங்கள் நித்திரை செய்துகொண்டிருப்போம்

> ஞாபகக் குறிப்பு:
> தன்மை - ஒருமை எதிர்காலத் தொடரிலோ, தன்மை - பன்மை எதிர்காலத் தொடரிலோ will be என்பது சேர்ந்து நடைபெற்றுக்கொண் டிருப்பதைக் குறித்து நிற்கின்றது.

### 2nd Person - Singular - Future Continuous Tense
### முன்னிலை - ஒருமை - எதிர்காலத் தொடர்

1. You will be eating
நீ சாப்பிட்டுக்கொண்டிருப்பாய்
நீங்கள் சாப்பிட்டுக்கொண்டிருப்பீர்கள்
2. You will be reading
நீ வாசித்துக்கொண்டிருப்பாய்
நீங்கள் வாசித்துக்கொண்டிருப்பீர்கள்
3. You will be singing
நீ பாடிக்கொண்டிருப்பாய்
நீங்கள் பாடிக்கொண்டிருப்பீர்கள்
4. You will be sleeping
நீ நித்திரை செய்துகொண்டிருப்பாய்
நீங்கள் நித்திரை செய்துகொண்டிருப்பீர்கள்

### 3rd Person - Singular - Future Continuous Tense
### படர்க்கை - ஒருமை - எதிர்காலத் தொடர்

1. He will be eating
அவன் சாப்பிட்டுக்கொண்டிருப்பான்
She will be eating
அவள் சாப்பிட்டுக்கொண்டிருப்பாள்
It will be eating
அது சாப்பிட்டுக்கொண்டிருக்கும்
2. He will be reading
அவன் வாசித்துக்கொண்டிருப்பான்
She will be reading
அவள் வாசித்துக்கொண்டிருப்பாள்
It will be reading
அது வாசித்துக்கொண்டிருக்கும்
3. He will be singing
அவன் பாடிக்கொண்டிருப்பான்
She will be singing
அவள் பாடிக்கொண்டிருப்பாள்
It will be singing
அது பாடிக்கொண்டிருக்கும்
4. He will be sleeping
அவன் நித்திரை செய்துகொண்டிருப்பான்
She will be sleeping
அவள் நித்திரை செய்துகொண்டிருப்பாள்
It will be sleeping
அது நித்திரை செய்துகொண்டிருக்கும்

### 3rd Person - Plural - Future Continuous Tense
### படர்க்கை - பன்மை - எதிர்காலத் தொடர்

1. They will be eating
அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருப்பார்கள்
2. They will be reading
அவர்கள் வாசித்துக்கொண்டிருப்பார்கள்
3. They will be singing
அவர்கள் பாடிக்கொண்டிருப்பார்கள்
4. They will be sleeping
அவர்கள் நித்திரை செய்துகொண்டிருப்பார்கள்

To be Continued next week.....

அன்புடன் ஆங்கில பிரியர்களுக்கு,
இப்பகுதி தொடர்பாக உங்கள் கருத்துக்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பினால் அதற்கேற்றவாறு இப்பகுதி மாற்றங்களுடன் வெளிவரும்.

கல்விச்சுடர் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு :-
ஆசிரியர், உதயன் கல்விச்சுடர்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் :newkalvisudar@yahoo.com.
தொலைபேசி : 021 2228310 / 071 6850005 / 071 4273035
தொலைநகல் : 021 2229944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலைய சிவன் முன்பள்ளிச் சிறார்களின் கலை விழாவும் வழியனுப்பு விழாவும் சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்

கதிரமலைச் சிவன் ஆலய ஆதீனகர்த்தா ஸ்ரீ காந்தக் குருக்கள் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மக்கள் வங்கியின் காங்கேசன்துறைக் கிளை முகாமையாளர் தி.சிவகுமாரன், கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.ரமேஸ், கதிரமலை சிவன் ஆலய குருக்கள் பிரம்ம ஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள், சனசமூக நிலையத் தலை வர் க.சிவம், உப தலைவர் க.கருணைநாயகம் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வை மூன்றாவது படத்திலும் காணலாம். (203)

உ
சிவமயம்

## யக்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேசம்
## வைபவ அழைப்பு

சைவச் சான்றோர்களே!

நீவிர் சகல சௌபாக்கியங்களுடன் இனிதே வாழ வேண்டுமென ஆசீர்வதிக்கின்றேன். ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் சர்வதாரி வருடம் தை மாதம் 24ஆம் தினம் வெள்ளிக்கிழமை (06.02.2009) மிருகசீரிட நட்சத்திரமும், துவாதசி திதியும் சித்தயோகமும் கூடிய சுப வேளையில் காலை 08 மணி 30 நிமிடங்களுக்கும் 10.30 மணிக்குமிடையில் வரும் சுபமுகூர்த்தத்தில்

எமது ஜ்யேஷ்ட புத்திரன்

### சிரஞ்சீவி ஞானஸ்கந்த சர்மா

அவர்களுக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் சன்னிதானத்தில் "யஜ்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேசம்" நிகழவிருப்பதால் மேற்படி சுபமுகூர்த்த வேளையில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதமாக வருகை தந்து குமாரனை ஆசீர்வதித்து அவர் தம் கடமைகளை முன்னெடுக்க ஆற்றுப்படுத்துமாறு இத்தால் அன்புடன் அழைக்கின்றோம். அன்றைய தினம் மாலை 3 மணியிலிருந்து மல்லாகத்தில் அமைந்துள்ள எமது வாசஸ்தல இல்லத்தில் சைவசான்றோர்களை வரவேற்கும் நிகழ்வுகளிலும் பங்கு கொள்ளுமாறு இத்தால் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்,
மாவையாதீனம்,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

மாவையாதீனம் இளவரசு
இரத்தினசபாபதி சிவாச்சாரியர்
தம்பதியர்.

(சி/557045)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.3

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத் திருநாள் பூசைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறும் என்று ஆலய ஆதின கர்த்தாவும் பிரதம குருவுமான மஹாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள் தெரிவித்தார்.

காலையில் 7 மணியளவில் விசேட அபிஷேகம் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து விசேட அலங்கார பூசைகளும், அர்ச்சனைகளும் நடைபெற உள்ளன. முற்பகல் 10 மணிக்கு முருகப் பெருமான் வீதி உலா வருவார். அதன் பின்னர் மகேஸ்வர பூசை நடைபெறும்.

அடியார்கள் ஆலயத்துக்குச் சென்று வர தெல்லிப்பழை சோதனை நிலையத்திலிருந்து விசேட வாகன சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆதீனகர்த்தா அறிவித்துள்ளார்.

* * * * * *

வண்ணை, பெப்.6

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தைப்பூச நிகழ்வு நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக, ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ந்து 9 மணிக்கு விசேட சமயச் சொற்பொழிவும் முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும். (204-160)

* * *

வடமராட்சி, பெப்.6

பருத்தித்துறை, புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தைப்பூசம் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றையதினம் விசேட அபிஷேக பூசைகளுடன் சுவாமி வீதி உலா வருவார். (203-236)

* * * * *

வடமராட்சி, பெப்.6

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருவிழா நடைபெறும்.

அன்றையதினம் முற்பகல் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் விசேட பூசைகள் நடைபெற்று சுவாமி வீதிஉலா வருவார். (203-236)

* * * * *

வடமராட்சி, பெப்.6

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நாளை மறுதினம் - ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருவிழா நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பகல் விசேட அபிஷேகத்துடன் பூசைகள் இடம்பெறும். (203-236)

* * * * *

யாழ்ப்பாணம், பெப்.6

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ செல்வ பாலநர்த்தன விநாயகர் கோயிலில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சம்புரோஷண பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு ஸ்தூபி அபிஷேகம், 8 மணிக்கு மஹா கும்பாபிஷேகம், தசமங்கள தரிசனம், விசேட பூசை, குருமார் கௌரவிப்பு, ஆசீர்வாதம், ஆசியுரை, முற்பகல் 11 மணிக்கு மகேஸ்வர பூசை, மாலை 5 மணிக்கு விஷேட பூசை, திருவீதியுலா ஆகியன நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்விற்கு மருதனார்மட ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோயில் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரரேஸ்வரக்குருக்கள் பிரதிஷ்டா பிரதமகுருவாகக் கலந்துகொள்வார். (204)

* * * * *

வண்ணை, பெப்.6

யாழ்.புனித மரியாள் (ஓ.எல்.ஆர்) தேவாலயத்திற்கு வெளியே அமைந்துள்ள தூபியில் இன்று வெள்ளிக்கிழமை முதல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இந்தத் திருப்பலி பூசை மாதந்தோறும் வரும் முதல் வெள்ளிக் கிழமைகளில் ஒப்புக்கொடுக்கப்படும் என பங்குத்தந்தை அருட்பணி ம.றெஜி இராஜேஸ்வரன் தெரிவித்தார். (204-160)

## வடமராட்சி தெற்கு- மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## நெல்லியடி நவீன கடைத்தொகுதிக் கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான
# கேள்வி அறிவித்தல்- 2009

கீழே விவரிக்கப்பட்ட கடைகளை, உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஆகக்கூடிய கேள்வித்தொகை இச்சபைக்கு செலுத்துபவர்களுக்கு ஏப்ரல் 2009 இலிருந்து வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 06.03.2009 பிற்பகல் 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி: 12.03.2009 பிற்பகல் 3.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி: 13.03.2009 முற்பகல் 10.00 மணி
04. கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, அரக்கு முத்திரையிட்ட தபாலுறையில் இட்டு, இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், கடை இலக்கமும் தெளிவாக எழுதி, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக எமக்குப் பதிவஞ்சலிலோ அல்லது தலைமை அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.
05. கடைகளின் நீள, அகலம் முறையே 15' X 12' ஆகும்.
06. கேள்விப் படிவம், நெல்லியடி உப அலுவலகத்தில் ஆளடையாள அட்டை காண்பித்து உரிய படிவக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பன செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
07. அரசாங்க கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் நிறுவனங்களும் இக்கேள்வி நடைமுறைக்கு அமைவாக கடைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
08. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
09. மேலதிக விவரங்களை நெல்லியடி உப அலுவலகத்திலும், தலைமை அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

## கேள்வி அட்டவணை

| விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (வற்வரி நீங்கலாக) | மாத வாடகை |
|---|---|---|---|---|
| கடை இல.3 | 6,50,000.00 | 10,000.00 | 750.00 | 1000.00 |
| கடை இல.4 | 6,50,000.00 | 10,000.00 | 750.00 | 1000.00 |
| கடை இல.5 | 6,50,000.00 | 10,000.00 | 750.00 | 1000.00 |
| கடை இல.6 | 6,50,000.00 | 10,000.00 | 750.00 | 1000.00 |
| கடை இல.7 | 6,50,000.00 | 10,000.00 | 750.00 | 1000.00 |
| கடை இல.8 | 6,50,000.00 | 10,000.00 | 750.00 | 1000.00 |
| கடை இல.9 | 6,50,000.00 | 10,000.00 | 750.00 | 1000.00 |
| கடை இல.10 | 6,50,000.00 | 10,000.00 | 750.00 | 1000.00 |
| கடை இல.11 | 6,50,000.00 | 10,000.00 | 750.00 | 1000.00 |

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி. 27.01.2009

(சி/557042)

[illegible]
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய

# கிராமங்களுக்கிடையேயான ஓட்டப் போட்டியில் 3 வீரர்கள், 4 வீராங்கனைகள் வெற்றி பெற்றனர்

வலி.வடக்கு, பெப்.6

வட மாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் நடத்தப்பட்ட(Cross Country) கிராமங்களுக்கு இடையே ஓட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 07 வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

வவுனியாவில் இடம்பெற்ற இப்போட்டி களில் வவுனியா, மன்னார் மற்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 31 வீரர்களும் 26 வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

பெண்களுக்கான ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் முறையே ஆர்.அனுசியா(சாவகச்சேரி பிரதேச செய லகம்), என்.மேரி(சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), என்.சுமதி (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) ஆகியோர் பெற்றுக் கொண்டதுடன் பத்தாம் இடத்தை கே.நிரோ ஜினி(கோப்பாய் பிரதேச செயலகம்) பெற்றுக் கொண்டார்.

ஆண்களுக்கான போட்டியில் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் இடங்களை முறையே ரஜீ கரன்(வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு), நந்த குமாரன்(பருத்தித்துறை பிரதேச செய லகம்), திருவாகரன் (கோப்பாய் பிரதேச செயலகம்) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

அடுத்த வாரம் கொழும்பில் இடம்பெற வுள்ள தேசிய மட்டத்திலான போட்டி களில் இவர்கள் கலந்து கொள்வார்கள்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து நீண்ட காலத்தின் பின்னர் கிராமங்களுக் கிடையி லான ஓட்டப் போட்டியில் வீரர்கள் கலந்து கொண்டதுடன் அதிக கூடிய இடங்களை யும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது. (50-86)

# திருநெல்வேலி முத்துத்தம்பி வென்றது நல்லூர் பிரதேச எல்லே போட்டியில்

வலி.வடக்கு, பெப்.6

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழ கங்களுக்கு இடையே இடம்பெற்ற ஆண் களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டி யில் திருநெல்வேலி முத்துத்தம்பி விளை யாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பி யனானது.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகமும் திருநெல் வேலி முத்துத்தம்பி விளையாட் டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய முத்துத்தம்பி விளையாட்டுக் கழக வீரர்கள் அனை வரும் ஆட்டமிழந்தமையால் ஒரு புள் ளியை மட்டும் பெற்றுக் கொண்டது.

இரண்டு புள்ளிகளைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடக் களமிறங்கிய கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழக வீரர் கள் அனைவரும் ஆட்டமிழந்தனர்.

ஆட்ட நிறைவில் முத்துத்தம்பி விளை யாட்டுக் கழகம் 1:0 புள்ளி என்ற நிலை யில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று நல்லூர் பிரதேச செயலக சம்பியனாகியது. (50-86)

# பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டத்தில் கொக்குவில் இந்துவை வென்றது யாழ்.கன்னியர் மடம்




வலி.வடக்கு, பெப்.6

இலங்கை பாடசாலைகள் கூடைப்பந் தாட்ட சங்கத்தினர் ஏற்பாட்டில் யாழ்ப் பாணப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் 'சிலிங்கோ இன்சூரன்ஸ்' சுன்னாகம் கிளையின் ஆதரவுடன் நடத்தப் பட்ட 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப் பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை சம்பியனாகியது.

உடுவில் மகளிர் கல்லூரி கூடைப் பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையும் மோதிக் கொண்டன.

ஆரம்ப முதல் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடி, பார்வையா ளர்களின் பாராட்டைப் பெற்றனர்.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிக ளும் தலா 06 புள்ளிகளைப் பெற்றிருந்தன.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சூடாக விளையாட ஆரம்பித்த போதிலும் தொடர்ந்து போராடும் நிலையை இறுதி நேரத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி கைவிட்டது. இதனால் திருக் குடும்பக் கன்னியர்மடம் 13 புள்ளிகளைப் பெற்றதுடன் கொக்குவில் இந்துக் கல் லூரி 05 புள்ளிகளை மட்டும் பெற்றுக் கொண்டது.

ஆட்ட இறுதியில் யாழ்ப்பாணம் திருக் குடும்ப கன்னியர் மடம் பாடசாலை 19:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கொக்கு வில் இந்துக் கல்லூரியை வென்று இந் தாண்டுக்கான சம்பியனாகத் தெரிவு செய் யப்பட்டது.

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையைச் சேர்ந்த துஷாநந் தினி, கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த தரசுதா, உடுவில் மகளிர் கல்லூரி யைச் சேர்ந்த கமலினி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த அஞ் சலின் ஆகியோர் சிறந்த வீராங்கனை களாகத் தெரிவானார்கள். (50-86)



யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நல்லூர் றோட்டறிக் கழக ஆதரவுடன் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் மோதிக் கொண்ட தெல்லிப்பளை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக வீராங்கனைகளையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொக் குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் மற்றும் விருந்தினர்களையும் படத்தில் காணலாம். (படம்:நேசன்)

# இணுவில் இந்து அணி சம்பியனானது; உடுவில் பிரதேச வலைப்பந்தாட்ட போட்டியில்

வலி.வடக்கு, பெப்.6

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங் களுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந் தாட்டப் போட்டியில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டி யில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகமும் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் முதல்பாதி ஆட்டத் தில் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் இணுவில் இந்து வீராங்கனைகள் துரிதமாக விளையாடினார்கள்.

முதல்பாதி ஆட்டத்தில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் 11:6 புள்ளி கள் என்ற முன்னணி நிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் 9:3 புள்ளி கள் என்ற அடிப்படையில் முன்னணியில் காணப்பட்டது.

ஆட்ட இறுதியில் இந்து விளையாட் டுக் கழகம் 20:09 புள்ளிகள் என்ற அடிப் படையில் உடுவில் மத்திய விளையாட் டுக் கழகத்தை வெற்றி பெற்று சம்பி யனாகியது. (50-86)

# மாவட்ட மட்ட பெண்கள் கூடைப்பந்தாட்டம் கிண்ணத்தை வென்றது யாழ்ப்பாணம் பமிலியன்ஸ்

வலி.வடக்கு, பெப்.6

யாழ்.மாவட்ட செயலக விளையாட் டுப் பிரிவு மாவட்ட மட்டத்தில் கழகங்க ளுக்கு இடையே நடத்திய பெண்களுக் கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் பமிலியன்ஸ் விளையாட் டுக் கழகம் மாவட்டச் சம்பியனானது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை கூடைப் பந்தாட்ட மைதா னத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டி யில் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன் னியர் மடம் விளையாட்டுக் கழகமும், பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன.

நான்கு பிரிவுகளைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் பிரிவு ஆட்டம் நிறை வுற்ற வேளையில் இரு அணிகளும் தலா 10 புள்ளிகளைப் பெற்று சம நிலையில் காணப்பட்டன.

இரண்டாவது பிரிவில் திருக்குடும்ப கன்னியர் மடம் விளையாட்டுக் கழகம் 15 புள்ளிகளையும் பமிலியன்ஸ் விளையாட் டுக் கழகம் 13 புள்ளிகளையும் பெற்றது.

மூன்றாம் பிரிவு ஆட்டத்தில் யாரும் எதிர்பாரா வண்ணம் பமிலியன்ஸ் விளை யாட்டுக் கழகம் 10 புள்ளிகளைப் பெற்ற போதிலும் திருக்குடும்ப கன்னியர் மடம் விளையாட்டுக் கழகம் 01 புள்ளிகளை மட் டும் பெற்றுக் கொண்டதினால் ஆட்டத் தின் போக்கு மாற்றம் அடைந்தது.

நான்காம் பிரிவில் மீண்டும் திருக்கு டும்ப கன்னியர் மடம் விளையாட்டுக் கழ கம் மீண்டும் 7 புள்ளிகளைப் பெற்ற போதி லும் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் 06 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

ஆட்ட இறுதியில் பமிலியன்ஸ் விளை யாட்டுக் கழகம் 39:36 புள்ளிகள் என்ற அடிப்படையில் திருக்குடும்ப கன்னியர் மடம் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

போட்டியின் ஆட்ட நாயகியாக பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரவி தனுசாவும், போட்டிகளின் தொடர் ஆட்ட நாயகியாக திருக்குடும்ப கன்னியர் மடம் விளையாட்டுக் கழகத் தைச் சேர்ந்த மொறின் ரூபினாவும் தெரிவு செய்யப்பட்டனர். (50-86)







மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் [illegible] விரிவுரையாளரும், இளம் விஞ்ஞானியுமான கலாநிதி என்.ரவிராஜன் உரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும், பிரதம விருந்தினரின் [illegible]யம் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் மக்கள் இல்லை புலிகள் தான் அங்கு சிகிச்சை பெறுகின்றார்கள்

## பாதுகாப்பு செயலர் கோத்தபாய தெரிவிப்பு

''புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் பொது மக்கள் இல்லை. அங்கு இருப்பவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள். புலிகள்தான் அங்கு சிகிச்சை பெறுகின்றார்கள். எனவே தான் அது ஓர் இலக்கு''.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

பிரித்தானிய ''ஸ்கை'' ஒலிபரப்பு நிறுவனத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கிய சிறப்பு நேர்காணலிலேயே ''புதுக்குடியிருப்பு மருத்துவமனை ஒரு நியாயபூர்வமான இராணுவ இலக்கு'' என்றும், அதன்மீது நடத்தப்படும் தாக்குதல்கள் சரியானவைதான் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் பாதுகாப்புத் தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த கோத்தபாய ராஜபக்ஷ, ''பொதுமக்கள் அங்கு இல்லை இருப்பவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள்தான்- என்றார். புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் புலிகள்தான் சிகிச்சை பெறுகின்றனர். அதனால் அங்கு அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் பணியாற்ற வேண்டுமென்ற தேவை இல்லை'' என்று தெரிவித்த கோத்தபாய ராஜபக்ஷ, படையினரின் தாக்குதல் இலக்கு ஒரு போதும் தவறியது கிடையாது எனவும் கூறினார்.

இதேவேளை, கடந்தவாரம் உடையார்கட்டு மருத்துவமனை தாக்கப்பட்டு தமிழர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக பி.பி.சி. நிறுவனத்திற் குப் பேட்டியளித்த பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார, புதுக்குடியிருப்பில் மருத்துவமனை இயங்கும்போது மக்கள் ஏன் உடையார்கட்டு மருத்துவமனைக்கு போக வேண்டும்? எனக் கேட்டிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



இலங்கையின் 61 ஆவது சுதந்திர தினத்தையொட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை காலை கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்ற பிரதான நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேசியக் கொடி ஏற்றிவைத்த போது எடுக்கப்பட்ட படம். முப்படைத் தளபதிகளும் கொடிக்கு மரியாதை செலுத்துவதையும் படத்தில் காணலாம்.

# சனசமூக நிலையங்கள் தமது நிதியைப் பெற அறிவுறுத்தல்

ஆனைக்கோட்டை,பெப்.6

வலி.தென்மேற்கு.பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்குரிய 2008 இற்கான நன்கொடை நிதி வழங்கப்பட்டு வருவதாகவும் நேரகாலத்துடன் உரிய சனசமூக நிலையங்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

உரிய ஆவணங்களை வழங்கும் பட்சத்திலேயே மேற்படி நன்கொடையை பிரதேச சபையில் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

(203-20)

# ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பதற்காக முல்லைத்தீவுக்கு படகு மூலம் செல்வோம்

## தூத்துக்குடி வழக்கறிஞர் சங்கம் அறிவிப்பு

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் திங்களன்று படகு மூலம் முல்லைத்தீவு செல்லப் போவ தாக தூத்துக்குடி வழக்கறிஞர்கள் சங்க கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினை குறித்து ஆலோசிப்பதற்காக தூத்துக்குடி வழக்கறிஞர்கள் சங்கத்தின் அவசர கூட்டம் அதன் தலைவர் பிரபு தலைமையில் நடந்தது. துணைத் தலைவர் சுரேஷ் குருசாமி, இணைச் செயலாளர் ராஜாராம், முன்னாள் தலைவர் செங்குட்டுவன் மற்றும் மகேந்திரன், இக்னேஷியஸ், அதிசயகுமார், பூங்குமார், ஆறுமுகவேலன், ஹரிராகவன், வெற்றி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், தமிழகத்தில் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் நடத்தும் அனைத்து போராட்டங்களுக்கும் வக்கீல்கள் சங்கம் ஆதரவு அளிக்க முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் ரயில் மறியல் போராட்டம் நடத்துவது மற்றும் நாளை நடைபெறும் பேரணியில் பங்கேற்பது, அதன் பிறகும் இப்பிரச்சினைக்குத் தீர்வு கணப்படாவிட்டால் வரும் 9 ஆம் திகதி தூத்துக்குடியில் இருந்து படகுகள் மூலம் முல்லைத்தீவு செல்வது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இதுகுறித்து வழக்கறிஞர்கள் சங்க தலைவர் டி.எம்.பிரபு நிருபர்களிடம் கூறுகையில், இலங்கையில் சிங்கள இராணுவம் தமிழர்கள் வாழும் பகுதியில் கடும் தாக்குதல் நடத்திவருகிறது. இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை கணக்கிட முடியாது. ஆனால் பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்து மருத்துவ சிகிச்சை கூட கிடைக்காமல் தவித்து வருகின்றனர். உலகிற்கு மனிதாபிமானத்தை போதிக்கும் இந்திய அரசு இப்பிரச்சினையில் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறது.

இனிமேலும் தாமதிக்காமல் மத்திய அரசு உடனடியாக இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். படுகாயம் அடைந்துள்ள தமிழர்களை இந்தியா அழைத்து வந்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக தமிழக அரசும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்-என்றார்.

# வன்முறைகள் நிகழும் நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு முதலிடம்

அனைத்துலக ரீதியில் பொது மக்களுக்கு எதிராக அதிகம் வன்முறைகள் கட்ட விழ்த்து விடப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தை பிடித்தி ருக்கிறது.

பெல்ஜியம்,பிரசல்ஸ் நகரில் உள்ள உலக வன்முறைகள் கண்காணிப்பு மையம் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த தகவல் வெளியாகியிருக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சிறிலங்காவின் வடபகுதியில் அரச படையினர் மேற்கொண்டுள்ள இராணுவ முன்னெடுப்பில் பல அப்பாவிப் பொது மக்கள் நாளாந்தம் கொல்லப்படுவதுடன் இவ் வாறு பாதிக்கப்பட்ட அல்லது காயமடைந்த பொதுமக்களுக்கு உதவக் கூடிய பொது உதவி நிறுவனங்களுக்கும், இராணுவ தாக்குதல்கள் குந்தகம் விளைவித்து வருகின்றன.

இலங்கை இராணுவ முன்னெடுப்புக்களில் தாம் வெற்றியடைந்து வருவதாக அரசு கூறி வருகின்ற போதி லும், ஏராளமான பொதுமக்கள் ஜனவரி மாதத்தில் கொல்லப்பட்டுள்ளதுடன், தற்போதைய நிலைமை அதைவிட மோசமடைந்துள்ளது. உலகில் தற்போது நடைபெற்றுவரும் மிக மோசமான போர் முன்னெடுப்புகளில் மிக அதிகமான பொதுமக்கள் பாதிக்கப்படும் இடமாக இலங்கையின் வடபகுதி காணப்படுகின்றது.

இஸ்ரேலியப் படையினரின் முன்னெடுப்பால் பாதிப்படைந்த காசா நிலப்பரப்பு, அரசுக்கு எதிரான மக்கள் எதிர்ப்புக்கள் தீவிரமடைந்துள்ள மடகஸ்கார் பகுதி, அரச படைகளுக்கெதிராகப் போர் புரியும் மாலி நாட்டின் ரோறாக் போராளிகளின் போர்ப் பகுதி போன்றன, ஏனைய மூன்று வன்முறை அதிகம் நிறைந்த பகுதிகளாகக் காணப்படுகின்றன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்பள்ளிகளுக்கு சத்துணவுப் பொருள்கள்

ஆனைக்கோட்டை,பெப்.6

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்குரிய பெப்ரவரி மாதத்திற்கான சத்துணவுப் பொருள்கள் பிரதேச சபைக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவை எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் உரிய முன்பள்ளிகளுக்கு வழங்கப்படவிருப்பதாக பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

இதற்கென பொறுப்புள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் மேற்படி பிரதேச சபை அலுவலகத்துக்கு வருகைதந்து சத்துணவுப் பொருள்களைப் பெற்றுச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-20)



அண்மையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒரு தாய் ஒரே சூலில் 3 குழந்தைகளைப் பிரசவித்தார். 3 குழந்தைகளையும் பராமரிப்பதற்கு அதிக பொருளாதார உதவி தேவைப்படும் நிலையில் ஒரு வருடத்துக்குத் தேவையான பால்மா விற்கான காசோலையை அஸ்ரோன் மருத்துவ நிறுவனத்தின் வடமாகாண மருத்துவப் பிரதிநிதி ம.மயூரதன் வழங்குவதையும், அருகில் மகப்பேற்று வைத்திய நிபுணர் சிறிதரன், மற்றும் குழந்தை வைத்திய நிபுணர் அருள்மொழி நிற்பதையும் படத்தில் காணலாம்.

## கசிப்பு விற்பனை செய்த நால்வருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம்,பெப்.6

கசிப்பு மற்றும் அனுமதியின்றி சாராயம் விற்பனை செய்த நால்வர் சாவகச்சேரி நீதிமன்றினால் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸார் மீசாலை மேற்கு, சங்கத்தானை ஆகிய இடங்களில் சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த இருவரையும், கைதடி கிழக்கு மறவன்புலோ ஆகிய இடங்களில் அனுமதியின்றி சாராயம் விற்பனை செய்த இருவரையும் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஆஜர் செய்தனர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான் நால்வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (203-236)

# மாணவர்களுக்கு மதியம் வழங்கும் உணவில் மீனைச் சேர்ப்பதை நிறுத்த வேண்டும்

## ஆதீன முதல்வர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.6

குடாநாட்டு மாணவர்களுக்கு மதிய உணவில் கடலுணவு வழங்குவதை நிறுத்தி எமது சைவ பாராம்பரியங்களை அழியவிடாது பாதுகாப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

உண்மைச் சைவர்களாக வாழும் நாம் அதன் பாரம்பரிய கலாசாரங்களையும் அதன் கோட்பாடுகளையும் பேணிக்காப்பது தலையாய கடமை.

இப்போது யாழ்.குடாநாட்டில் கல்வி பயிலும் மாணவச் செல்வங்களுக்கு மதிய உணவு வழங்கும் நல்லதொரு சேவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை யிட்டு நாங்கள் உளம் மகிழ்கிறோம்.

இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவது வரவேற்கத்தக்கது. பாராட்டப்பட வேண்டியது. பாரபட்சம் காட்டாது வழங்கப்படும் சத்துணவு, போஷாக்குணவு.

காலத்தால் அழியாத, வெள்ளத்தால் அழியாத, தீயினால் அழியாத கல்விச் செல்வத்தைப் பெறும் மாணவர்களுக்கு பயன் தரும் நல்ல விடயமாகும்.

இத்தகைய நல்ல நிகழ்வினால் மாணவ சமுதாயம் முழுவதுமே பயனடைவதை எண்ணும் போது அதைச் செய்பவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

எனினும் இச்சத்துணவு வழங்கும் திட்டத்தில் எங்களது சைவப்பாரம் பரியத்துக்கு ஒவ்வாத கடலுணவு(மீன்ரின்) வழங்கப்படுவது கவலைக்குரியது.

[illegible]னில், தொன்று தொட்டு எம் மால் கட்டிக் காக்கப்பட்டுவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் காக்கப்பட்டுவரும் சைவ பாராம்பரியமும், கோட்பாடும், சைவ ஒழுக்கமும் மீறப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது.

எமது எதிர்கால சந்ததி இவ்வாறு சைவ மரபு இல்லாமல் வாழ்வது கவலையைத் தருகின்றது.

எமது கண்களை நாமே குத்திக் கொள்ளக் கூடாது. படித்துப் பட்டம்பெற இருக்கும் மாணவர்கள் சைவமரபு பிறழாமல் வாழ வேண்டும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு கடலுணவு வழங்குவதை நிறுத்தி எமது சைவ பாரம்பரியம் அழியாமல் பாதுகாக்க வேண்டும்- என்று கேட்டுள்ளார். (09)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்த தமிழர்கள் ஈழத்து உறவுகளைக் காப்பாற்றக்கோரி பல நாடுகளில் போராட்டம்

கொழும்பு, பெப். 06

வன்னியில் தமிழ் மக்களின் படுகொலையைக் கண்டித்து, பிரித்தானியா, பிரான்ஸ், ஜெர்மன், சுவிஸ், டென்மார்க், நோர்வே, நெதர்லாந்து, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, இத்தாலி, சைப்பிரஸ் ஆகிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழரின் கரிநாளாக உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் ஐக்கிய இராச்சியத்தின் தமிழ் இளையோரும், பிரித்தானிய தமிழர் ஒன்றியமும் இணைந்து பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு முன்பாகவும், லண்டனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்பாகவும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகியது. அதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தியும் கலந்துகொண்டார்.

சுவிற்சர்லாந்தில்

வன்னியில் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் படுகொலையைக் கண்டித்தும், இலங்கையின் சுதந்திரதினம் தமிழரின் கறுப்புநாள் எனப் பிரகடனப்படுத்தியும் சுவிஸ், ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையக முன்றலில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜெனிவா நகர் இந்த ஆர்ப்பாட்டத்தினால் பலமணி நேரம் செயலிழந்தது.

''அழிவிலும் எழுவோம்'' என்ற தொனிப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் கலந்துகொண்ட மக்கள் தாயக மக்களின் இன்றைய அவல நிலையைப் போக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுக்கும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரும் தமது முன்மொழிவுகளைத் தீர்மானங்களாக்கி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு மனுவாகக் கையளித்தனர்.

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக அமைதி வழி ஒன்று கூடல்கள், கண்டனப் பேரணிகள், பொதுக்கூட்டங்கள் என்று நடத்திய நாம் ஐக்கிய நாடுகள் சபையையும் சுவிஸ் அரசினையும் சுவிஸ் மக்களையும் மதித்தே வந்திருக்கின்றோம்.

ஆனாலும் எம் இனத்தையே இல்லாதொழிக்கும் நோக்கில் மூர்க்கத்தனமான போரைத் தொடுத்திருக்கும் சிங்களப் பேரினவாதத்தின் இன அழிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்தும் ஐக்கிய நாடுகள் சபை பாராமுகமாக இருப்பதை அனுமதிக்க மாட்டோம். என முழக்கமிட்டவாறு ஐக்கிய நாடுகள்சபையின் பிரதான நுழைவாயிலை மக்கள் சூழ்ந்துகொண்டனர்.

ஐக்கியநாடுகள் சபையின் முன்றலை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதிகளில் அமர்ந்தவாறு தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை தமது முற்றுகை, வீதி மறியல் போராட்டத்தை நிறுத்த மாட்டோம் என முழக்கமிட்டவாறு தொடர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மக்களின் பேரெழுச்சியையும் கோபக் கொந்தளிப்புகளையும் புரிந்துகொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் உயரதிகாரிகள் மக்கள் கூடி முற்றுகை செய்த பகுதிக்கு வந்து ஏற்பாட்டாளர்களிடம் அளித்த வாக்குறுதிகளை ஏற்றுத் தமது ஒன்று திரண்ட அதிர்வலைகளை முழக்கங்களாக்கி இந்த ஒன்றுகூடலை நிறைவு செய்தனர்.

பிரான்ஸில்

அதேசமயம் பிரான்ஸின் தலைநகரான பரிஸின் வரலாற்று சிறப்புமிக்க பகுதியில் அமைந்துள்ள அமைதிச்சுவர் என்னும் நினைவிடத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் என்றுமில்லாத வகையில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் ஒன்று கூடித் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

கடும் குளிரின் மத்தியிலும் உரத்த குரலில், ''இலங்கை அரசே அப்பாவித் தமிழ் மக்கள் மீதான படுகொலையை நிறுத்து'', ''தமிழீழ விடுதலைப் புலிகள் தான் எமது ஏகப்பிரதிநிதிகள்'', ''அனைத்துலக ஊடகவியலாளர்களை தமிழ் மக்கள் பிரதேசங்களுக்கு அனுப்பு'' போன்ற உணர்ச்சி முழக்கங்களை விண்ணதிரக் கூவினர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நிகழ்வில் பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீன் வோன் கோக் நேரடியாகவே கலந்துகொண்டு உரையாற்றியதுடன் விண்ணப்பத்தையும் நேரடியாகவே பெற்றுச் சென்றார்.

அத்துடன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கள் பல்வேறு நகர சபைகளின் முதல்வர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் தமிழின உணர்வாளர்கள் பலர் கலந்து கொண்டு இலங்கை அரசி னால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப் பட்டு வரும் இனப் படுகொலைக்கு எதிராகத் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

இந்த எதிர்ப்பு எழுச்சிக்கு ஆதரவாக பரிஸின் லாசப்பாவில் உள்ள தமிழ் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு அனைத்திலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

அத்துடன், வர்த்தக நிலையங்களை கறுப்புத் துணிகளால் மூடியும் தமது முழுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

தென்னாபிரிக்காவில்

தென்னாபிரிக்காவின் நீதிக்கும் சமாதானத்திற்குமான ஒருமைப்பாட்டுக்குழு, தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தென்னாபிரிக்க தமிழர் கூட்டமைப்பு, அருட்பா கழகம், தென்னாபிரிக்க இஸ்லாமிய ஒன்றியம், ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ், தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சி, சிறுபான்மை முன்னணி ஆகிய அமைப்புகள் அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளன.

இவ்வாறான ஆர்ப்பாட்டத்தில் முதன்முறையாகத் தென்னாபிரிக்காவின் பல்லின அரசியல் கட்சிகள் கலந்துகொண்டமை இலங்கையில் தமிழ் மக்கள எதிர்கொள்ளும் சொல்லெணாத் துன்பங்களின் முகியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது. என்று நோக்கர்கள் தெரிவித்தனர்.

நெதர்லாந்திலும் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை வன்னியில் தமிழர்களின் படுகொலையைக் கண்டிதது புலம் பெயர்ந்த மக்கள் ஆரப்பாட்டங்களை நடத்தினர்.

ஜேர்மனியில்

அதேவேளை, ஜேர்மன் பேர்லின் நகரில் 'சாவின் விளிம்பில் தமிழீழம்' என்ற தொனிப் பொருளில் நேற்று முன்தினம் தமிழர்கள் ஆரப்பாட்டங்களை நடத்தினர்.

டென்மார்க்கில் உள்ள தமிழ் மக்கள் நேற்று முன்தினம் காலை 11 மணிமுதல் 2 மணிவரை வன்னியில் தமிழ் மக்களின் படுகொலையைக் கண்டிதது ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

அன்றைய தினம் இத்தாலி மற்றும் சைப்பிரஸ் நாடுகளிலும் புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். (அ-சி)

## ஆங்கில தின நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.6

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் வளர்மதி நிறைவாழ்வகமும் இணைந்து நடத்தும் ஆங்கில தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கொக்குவில் வளர்மதி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்கிறார். (1-2)

## உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான மாதாந்த கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்தது எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




THE ART OF LIVING

# தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் அவர்களின் வேண்டுகோள்!

ஒரு குறிக்கோளை அடைவதற்கு முடியாமல் இருக்கும் பொழுது, வேறு வழியில் செல்வதில் எந்த விதமான தவறும் கிடையாது. பலவிதமான துன்புங்களை அனுபவித்துவரும் தமிழ் மக்களைப் பற்றிய கவலை உலகமனைத்திற்குமே இருக்கிறது! ஸ்ரீலங்காவிலுள்ள அனைத்து மக்களின் நலனைக் குறித்துப் போரை நிறுத்தி, வன்முறைப் பாதையை ஒரு முடிவுக்கு கொண்டுவர இத்தருணத்தில் அனைத்துக் கட்சிகளுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன்!

குறிப்பாக, மக்களுக்காகத் தங்கள் வாழ்க்கையையே இழக்கத் தயாராக இருக்கும் இளைஞர்களை அமைதி மற்றும் அகிம்சை வழியில் வருமாறு அழைக்கின்றேன்!

இவ்வழி எவ்விதத்திலும் உங்கள் நேர்மையையோ, மக்கள் மீது நீங்கள் கொண்டுள்ள விசுவாசத்தையோ சிதைப்பதாக இருக்காது என ஆன்மீகத் தலைவரான நான் உறுதி அளிக்கின்றேன். தமிழ் மக்களின் நலனைப் பெருக்க புதிய வழிகளைக் கண்டறியும் அவாவில் மக்களின் முன்னேற்றத்திற்காக மாற்று வழியைக் கைக் கொள்வது என்பது, போரில் தோற்றுப் போவதாகவோ அல்லது கோழைத்தனமாகவோ, கருதப்படுவதில்லை. காலத்திற்கும், சூழ்நிலைக்குமேற்ப இது ஒரு புத்திசாலித்தனமான செய்கையே ஆகும். நிலவும் இத்தருணத்தைக் கருத்தில் கொண்டால், வன்முறையைக் கைவிடுவது அனைத்து கட்சிகளுக்குமே நன்மைபயக்கும்!

எல்லாம் வல்ல இறைவனின் கருணை உங்களுடனேயே உள்ளது, மனம் தளர வேண்டாம். ஏமாற்றமடைய வேண்டாம். முரண்பாடுகள் நிறைந்த இத்தருணத்தில் நாம் அனைவரும் ஒன்று கூடி, எல்லோருக்கும் நியாயமான கௌரவமான வாழ்க்கை கிடைக்கக் கூடிய வகையில் ஸ்ரீலங்காவின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்குவோம்.

தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் அவர்களின் வாழும்கலை சர்வதேச தலைமை அலுவலகம் பெங்களூர், இந்தியாவிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது.

www.artofliving.org www.srisri.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் பாதுகாப்பு வலயங்கள் ஈழத் தமிழ் மக்களின் மரணப் படுகுழிகள்!

## தமிழின அழிப்பை மத்திய அரசு தடுக்கத் தவறினால் தேர்தலைப் புறக்கணிக்கக் கோருகிறார் விஜயகாந்த்



சென்னை, பெப். 06

இலங்கையில் நடைபெறும் தமிழினப் படுகொலையை மத்திய அரசு தடுக்கத் தவறினால் தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சியினரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முடிவு எடுக்க வேண்டும்.

இலங்கை அரசின் பாதுகாப்பு மண்டலங்கள் என்பது ஈழத் தமிழரின் மரணப்படுகுழிகள். இதைச் சிங்கள அரசு வேண்டுமென்றே மறைத்து வருகிறது. - இவ்வாறு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கைத் தமிழர் பிரச்சினை எதிர்பாராத வகையில் ஒரு பெரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. சிங்கள அரசின் முப்படைகளும், தமிழர் பகுதிகளை தாக்கியதன் விளைவாக இன்று முல்லைத்தீவின் ஒரு சிறிய பகுதியில் சுமார் இரண்டரை லட்சம் தமிழர்கள் போரில் சிக்கித் தவிக்கின்றனர் - துடிக்கின்றனர்.

எந்த நேரத்திலும் அவர்களுக்கு எதுவும் நேரலாம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. சிங்கள அரசோ, பாதுகாப்பு மண்டலப் பகுதிகள் என்று ஒரு சில பகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன எனவும், போர் முனையில் சிக்கியுள்ள தமிழர்கள் அந்தப் பகுதிகளில் வந்து பாதுகாப்பாக தங்கிக்கொள்ளலா மென்றும் அறிவித்துள்ளது.

ஆனால், பாதுகாப்பு மண்டலப் பகுதிக்கு தமிழர்கள் சென்றால், வயதானவர்கள், குழந்தைகள் தவிர, மீண்டும் தீவிரவாதிகள் உருவாகக் கூடாது என்று சொல்லி சிங்களப் போர் படையினர் தமிழ் இளைஞர்களைக் கொன்று விடுகின்றனர். பெண்களையும் மான பங்கப்படுத்தி அழித்து விடுகின்றனர். சிங்கள அரசின் பாதுகாப்பு மண்டலங்கள் என்பது தமிழர்களின் மரணப்படுகுழிகள். இதைச் சிங்கள அரசு வேண்டுமென்றே மறைத்து வருகிறது.

சிங்கள அரசின் இத்தகைய போக்கின் காரணமாக அங்குள்ள தமிழர்கள் சிங்களவர்கள் கையில் சிக்கிச் சாவதை விட அவர்களை எதிர்த்து போராடி செத்து மடிவதே மேல் என்ற நிலைக்கு ஆளாகி விட்டனர். இந்தச் சூழ்நிலையில் சிங்கள அரசு போரை மேலும் நீடித் தால் பல லட்சக்கணக்கான தமிழர்கள் பேரழிவையே சந்திக்க வேண்டியிருக்கும். ஆகவே உயிர்கள் பலியாவதைத் தடுக்க மனிதாபிமானமுள்ள உலகம் அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய மனிதகுலப் பேரழிவு ஏற்படும் அபாயக்கட்டத்தில், உலகில் பல்வேறு நாடுகளில் ஐ.நா.மன்றம் தலையிட்டுள்ளது. அது போல ஐ.நா.மன்றம் இந்தப் பிரச்சினையிலும் தலையிட்டு உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யவும், அதை கண்காணிக்கவும், உணவு, மருந்து போன்ற அத்தியாவசிய பொருள்களை வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் -என்றுள்ளது.

# கண்களைக் குளமாக்கிய ஈழ அகதிகள்: கும்மிடிப்பூண்டில் உண்ணாவிரதப் போர்

கும்மிடிப்பூண்டி, பெப். 06

கும்மிடிப்பூண்டி இலங்கைத் தமிழர் அகதி முகாமில் 1,300 பேர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உண்ணாவிரதப் போர் நடத்தினர். அதில் பங்கேற்ற பெண்கள், மாணவிகள் தமது ஈழ உறவுகளின் துயரம் கண்டு கதறியழுதமை அனைவரையும் கண் கலங்க வைத்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் தமிழர்கள் இராணுவத்தால் கொல்லப்படுவதைக் கண்டித்தும், பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் என்பதால் அந்நாளை கறுப்பு தினமாக அனுசரிக்கும் வகையிலும் இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

முன்னதாக, உண்ணாவிரதத்திற்கு வட்டாட்சியரிடம் அனுமதி கோரினர். அனுமதி கிடைக்காததால் ஆவேசத்துடன் கோஷமிட்டனர், அதன்பின் ஊர்வலமாகச் சென்று உண்ணாவிரதத்தைத் தொடங்கினர்.

உண்ணாவிரத்தை ஒட்டி 300 மாணவர்களை பெற்றோர்கள் பாடசாலைக்கு அனுப்பவில்லை. முகாமிலுள்ள அனைத்துக் கடைகளும் மூடப்பட்டன. இலங்கைத் தமிழருக்காக தீக்குளித்து இறந்த முத்துகுமாருக்கு மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்திய அரசும், ஐ.நா. சபையும் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டி உடனடி போர்நிறுத்தம் செய்ய இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்த மாணவிகள் கண்ணீருடன் தெரிவித்தனர்.

உண்ணாவிரதத்தில், பங்கேற்ற பெண்கள், இலங்கையின் துயரத்தைக் கண்டு கதறியழுதனர். உண்ணாவிரதத்தின்போது மாணவிகள் கதறியழுதது மிகவும் சோகமாக இருந்தது. உணர்ச்சிக் கொந்தளிப்புடன் இளைஞர்கள் காணப்பட்டனர்.




# இந்திய அரசின் துரோகத்தை வரலாறு மன்னிக்காதென குமுறுகிறார் வைகோ

சென்னை, பெப். 06

இலங்கையில் லட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்படுவதைப் பற்றி இந்திய அரசுக்குத் துளி அளவும் கவலையோ, அனுதாபமோ கிடையாது என்பதைத் தமிழக மக்களும், இந்திய மக்களும் என்றாவது ஒரு நாள் தெரிந்துகொள்வர். இந்தத் துரோகத்தை வரலாறு மன்னிக்காது - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை வருமாறு-

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் முக்கிய உறுப்பினர்களும், அமெரிக்காவில் உள்ள ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பாரக் ஒபாமாவைச் சந்தித்து, இலங்கை இராணுவத்தால் கொல்லப்படும் ஈழத்தமிழரைக் காக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தினர்.

இந்தப் பின்னணியில்தான், ஏற்கனவே ஈழத்தமிழர்களின் துயரம் குறித்து அனுதாபம் கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபேண்டுடன் இணைந்து, ஈழத்தமிழர்களைக் காக்க கூட்டறிக்கையைத் தந்துள்ளனர்

''இரு தரப்பும் உடனடியாக போர் நிறுத்தத்துக்கு முன்வர வேண்டும்'' என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போரினால் தமிழர்கள் கொல் லப்படுவதைப் பற்றி, இந்திய அரசுக்கு துளி அளவும் கவலைகிடையாது என்பதைத் தமிழக மக்களும், இந்திய மக்களும் என்றாவது ஒரு நாள் தெரிந்து கொள்வார்கள் - என்றுள்ளது.

# ஈழத் தமிழருக்கு சமவுரிமை அதிகாரம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

## ராமதாஸ் அறிவிப்பு

இலங்கையில் போர் நிறுத்தப்பட்டு, அங்குள்ள தமிழர்கள் அனைத்து அதிகாரமும் பெற்று, சம உரிமையுடன் வாழும் நிலைமை ஏற்படும் வரை எமது போராட்டம் தொடரும். - என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பொது வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. எல்லா மாவட்டங்களிலும், எல்லாத் தரப்பு மக்களும் இப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு நல்கியுள்ளனர்.

வேலைநிறுத்தத் தில் ஈடுபடும்படி நாங்கள் யாரையும் கட்டாயப்படுத்த வில்லை. ஆனால் அரசின் மிரட்டல் காரணமாக, போக்குவரத்து ஊழியர்களைக் கட்டாயப்படுத்தி, அரசு பஸ்கள் இயக்கப்பட்டன. எனினும் அந்த பஸ்களில் பயணம் செய்யாமல் மக்கள் புறக்கணித்துவிட்டனர்.

போராட்டம் இத்துடன் முடிந்துவிடவில்லை. இலங்கையில் போர் நிறுத்தப்பட்டு, அங்குள்ள தமிழர்கள் அனைத்து அதிகாரமும் பெற்று, சம உரிமையுடன் வாழும் நிலைமை ஏற்படும் வரை எமது போராட்டம் தொடரும்.

புதன்கிழமை போராட்டத்தின்போது முழு அமைதி நிலவியதாக மாநில காவல் துறைத் தலைவர் அறிவித்துள்ளார். எனவே, கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

# நீதிபதியின் முன் ஆஜர்ப்படுத்த எதிர்ப்பு: சட்டத்தரணிகள் மீது பொலிஸார் தடியடி

சென்னை, பெப்.6

சென்னையில் கைது செய்யப்பட்ட சட்டத்தரணிகளை நீதிபதி முன் ஆஜர்படுத்த எதிர்ப்புத் தெரிவித்த சட்டத்தரணிகள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். இதில் சட்டத்தரணி புகழேந்தி படுகாயமடைந்தார். தவிர 10க்கும் மேற்பட்ட சட்டத்தரணி கள் காயமடைந்தனர். இதுகுறித்த விவரம் வருமாறு -

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்ட பொது வேலை நிறுத்தத்தின்போது ரகளையில் ஈடுபட்டதாகக் கூறி 23 சட்டத்தரணிகளை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களை ஜார்ஜ்டவுன் நீதிமன்ற மஜிஸ்திரேட் கே.ரவி முன்னர் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

இதையடுத்து, சைதாபேட்டை மஜிஸ்திரேட் வீட்டருகே திரண்டிருந்த சட்டத்தரணிகள், நீதிபதி முன் ஆஜர்படுத்த எதிர்ப்புத் தெரிவித்து கோஷங்களை எழுப்பினர்.

அப்போது வட சென்னை இணைக் கமிஷனர் ராமசுப்பிரமணி, சட்டத்தரணி புகழேந்தியை தடியால் தாக்கினார் எனக் கூறப்படுகிறது. இதில் புகழேந்தியின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. 10-க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளுக்கு லேசான காயம் ஏற்பட்டது

தடியடி சம்பவம் தொடர்பாக வட சென்னை பொலிஸ் இணைக் கமிஷனர் ராமசுப்பிரமணி, பூக்கடை துணைக் கமிஷனர் பிரேம் ஆனந்த் சின்ஹா உள்ளிட்ட 3 அதிகாரிகள் மீது மூத்த சட்டத்தரணி எஸ்.துரைசாமி மஜிஸ்திரேட் கே. ரவியிடம் முறைப்பாடு செய்தார். இதையடுத்து காயமுற்றவர்களுக்கு சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையளிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில், கைதான சட்டத்தரணிகள் 23 பேரும் அன்யை தினம் நள்ளிரவில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

# இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவைக்கு முன்னாள் நீதிபதிகள் கொண்ட துணைக்குழு

சென்னை, பெப். 6

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டு வதற்காக, இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவைக்கு துணை அமைப்பு ஒன்று உருவாக்கப்பட் டுள்ளது - என்று தி.மு.க. அறிவித்துள்ளது. இந்த அமைப்பின் செயலராக கனிமொழி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து தி.மு.க. தலைமைக்கழகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் போர்நிறுத்தத்தை வலியுறுத்தியும், அந்த நாட்டில் சிங்களவர்களுக்கு இணையான சம உரிமையும் அதிகாரப்பகிர்வும் பெற்றிடும் இனமாகத் தமிழின மக்களும் சமூக சூழலில் வாழ வகை செய்யும் ஒப்பந்தங்களும் நிறைவேற வேண்டும் என [illegible]டில் தி.மு.க. செயற்குழுவில் தீர்மான வடிவில் சுட்டிக்காட்டியுள்ள குறிக்கோளை நிறைவேற்ற வேண்டும். இதற்காக இப்போது அமைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவைக்கு துணை அமைப்பாக - உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படுகிறது.

இக்குழுவுக்கு சட்ட அமைச்சர் துரைமுருகன் அமைப்பாளராக இருப்பார். தி.க. தலைவர் கி.வீரமணி, மத்திய அமைச்சர் ராசா, மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி ஆகியோர் செயலர்களாக இருப்பார்கள். இவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக பல்வேறு நாடுகளில் உள்ள ஆர்வலர்களுடன் தொடர்புகொண்டு, உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டுவார்கள்.

இந்த அமைப்பின் முகவரி - 24, காந்தி மண்டபம் வீதி, கோட்டூர்புரம், அடையாறு, சென்னை- 600 085, இந்தியா. தொ.பே - 2447 1117- என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ரமின் சாதனையை முறியடித்தார் முரளி



இலங்கையின் வேகச் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் உலகிலேயே ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை நேற்று நிலைநாட்டினார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் போட்டியில் இந்திய வீரர் கௌதம் கம்பீரின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் முரளிதரன் உலக சாதனை மைல்கல்லை எட்டினார். 502 விக்கெட்டுக்களை எடுத்து பாகிஸ்தான் முன்னாள் வீரர் வஸீம் அக்ரமின் சாதனையை சமப்படுத்தியிருந்த முரளி நேற்று 503 ஆவது விக்கெட்டை வீழ்த்தி புதிய சாதனையை நிலைநாட்டினார்.

ஏற்கனவே டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரராக இருக்கின்றார். அத்துடன் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 1000 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தியவர் என்ற சாதனையும் முரளிக்கே உரியது.



# நான்காவது ஆட்டத்திலும் இந்தியா அசத்தியது

கொழும்பு, பெப்.6

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையே நேற்று கொழும்பில் இடம்பெற்ற 4ஆவது ஆட்டத்திலும் இந்தியா 67 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

ஆர்.பிரேமதாஸா மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதனடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 332 ஓட்டங்களைக் குவித்தது.

நேற்றைய ஆட்டத்தில் சச்சின் டெண்டுல்கருக்கு ஓய்வுகொடுக்கப்பட்டது. இதனடிப்படையில் ஆரம்ப வீரர்களாக வீரேந்திரர் ஷேவாக்குடன் கௌதம் கம்பீர் களமிறங்கினார்.

அணியின் எண்ணிக்கை 14ஆக இருந்தபோது ஷேவாக் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் வந்த அணித்தலைவர் டோனி, கம்பீருடன் இணைந்தார். இருவரும் நிதானமாகவும் அதே நேரம் அதிரடியாகவும் ஓட்டங்களைக் குவித்தனர்.

கம்பீர் 150 ஓட்டங்கள் குவித்து முரளிதரனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இது அவரின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும். அத்துடன் டோனி 97 ஓட்டங்களை எடுத்தார். இவர்களைவிட சுரேஷ் ரெய்னா 49 ஓட்டங்களை எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இலங்கையின் பந்துவீச்சில் குலசேகர அதிகபட்சமாக 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

333 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி 48 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 265 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இலங்கையின் ஆரம்பம் அனல் பறந்தாலும் பின்னர் விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கின. அணியின் சார்பாக சங்கக்கார, டில்ஷான், மஹேல, ஜெயசூர்யா, மஹ்ரூப் ஆகியோர் முறையே 56, 38, 28, 27, 28 ஓட்டங்களைப் பெற்றனர். அத்துடன் குலசேகர 39 ஓட்டங்கள் அதிரடியாகப் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்தியாவின் பந்துவீச்சில் இர்பான் பதான் 3 விக்கெட்டுக்களையும், பிரவீன்குமார் மற்றும் ஷேவாக் ஆகியோர் முறையே இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

நேற்றைய ஆட்டத்தின் ஆட்ட நாயகனாக இந்தியாவின் கௌதம் கம்பீர் தெரிவானார்.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரை இந்தியா ஏற்கனவே தனதாக்கிக் கொண்டுள்ளது. (சி)

## ருவன்ரி-20 ஆட்டத்தில் இருந்து

# மஹேல, சங்கக்கார நீக்கம் டில்சான் தலைமையில் குழு

கொழும்பு, பெப். 06

முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த ஒன்றரை வருடங்களாக சிகிச்சை பெற்று வந்த இலங்கை அணியின் இமயம் வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க மீண்டும் களம் இறங்குகின்றார்.

அறிமுகமாகி சில போட்டிகளிலேயே தனது வித்தியாசமான பந்து வீச்சால் மாத்திரமின்றி, தலைமுடி அலங்காரத்தாலும் ரசிகர்களைக் கவர்ந்தவர் லசித் மலிங்க. கடந்த முறை உலகக் கிண்ணத் தொடரின்போது, போட்டி ஒன்றில் அடுத்தடுத்து 4 பந்துகளில் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி இலங்கை ரசிகர்களை உற்சாக வெள்ளத்தில் மூழ்கச் செய்தவர் மலிங்க. கடந்த ஒன்றரை வருடங்களாக உபாதையில் இருந்த மலிங்க இப்போது எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான ருவென்ரி 20 போட்டியில் விளையாடவிருக்கின்றார்.

இந்தியாவுக்கு எதிரான ருவன்ரி 20 போட்டிக்கான இலங்கை அணியிலிருந்து மஹேல ஜெயவர்தனா, சங்கக்கார ஆகியோர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். புதிய அணித்தலைவராக டில்ஷான் நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணி தொடரை இழந்துள்ளது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான ருவன்ரி 20 போட்டி வரும் 14ஆம் திகதி நடக்க இருக்கிறது. இதற்கான இலங்கை அணி அறிவிக் கப்பட்டுள்ளது. இதில் அணித்தலைவர் ஜெயவர்தனா, உப அணித்தலைவர் சங்கக்கார ஆகி யோர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். இதற்கான உறுதியான காரணம் தெரியவில்லை.

புதிய அணித்தலைவராக டில்ஷானும், கபுகேதரா உப அணித்தலைவராகவும் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளனர்.

# மேற்கிந்தியாவுடனான டெஸ்ட்; வலுவான நிலையில் இங்கிலாந்து

ஜெமைக்கா, ஜன.6



மேற்கிந்தியத் தீவுகளின் ஜமைக்கா மைதானத்தில் நேற்று ஆரம்பமான மேற்கிந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல்நாள் ஆட்ட நேரமுடிவின் போது இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக் களை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதனடிப்படையில் அணியில் ஆரம்ப வீரர்களாக அன்றூஸ்ரோஸ் மற்றும் குக் ஆகியோர் களமிறங்கினர்.

அணியின் எண்ணிக்கை 8 ஆக இருந்த போது அணியின் தலைவர் ஸ்ரோஸ் ஓட்டங்களுடன் றம்டினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் அணியின் ஓட்டம் 31 ஆக இருந்தவேளை குக் சர்வானிடம் பிடிகொடுத்து நடையைக் கட்டினார்.

பின்னர் வந்த பீற்றர்சன் மற்றும் பெல் ஆகியோர் நிதானமாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை மெதுமெதுவாக உயர்த்தினர்.

பீற்றர்சன், பெல், கொலிங்வூட் ஆகியோர் முறையே 97,28,16 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அன்றூ பிளின்ரொப் 43 ஓட்டங்களுடனும் பிரயர் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் பென் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந் தார். இன்று இரண்டாம்நாள் ஆட்டம் தொடரும்.

# காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு ஆயுதப் போராட்டத்திலேயே உண்டு

## 12 தீவிரவாதக்குழுக்கள் முடிவு

இஸ்லாமாபாத், பெப். 06

''ஆயுதப் போராட்டத்தின் மூலமாகவே நீடித்து வரும் காஷ்மீர் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும்'' என 12 பாகிஸ்தான் தீவிரவாத குழுக்களின் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. வேறு எத்தகைய போராட்டத்தாலும் இதற்குத் தீர்வுகாண முடியாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாதக் குழுக்களின் இம்மாநாடு, பாகிஸ்தான் நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரின் தலைநகரான முஷாபராபாத்தில் பகிரங்கமாக நடத்தப்பட்டது. இத்தீவிரவாதக் குழுக்களில், பாகிஸ்தான் அரசால் தடைவிதிக்கப்பட்ட குழுக்களும் அடங்கும்.

''மும்பாய்த் தாக்குதல்களை அடுத்து, பாகிஸ்தான் அரசால் 150 பேர் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் லஷ்கர்-இ-தொய்பா, ஜமாத்-உட்-தாவா ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் அனைவரும், எவ்வித நிபந்தனையுமின்றி, பாகிஸ்தான் அரசால் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்'' என்றும் இதில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

''காஷ்மீர் விவகாரம் தொடர்பாக, முன்னாள் ஜனாதிபதி பேர்விஸ் முஷாரப் கோழைத் தனமான கொள்கைகளையே கடைப்பிடித்து வந்தார். அதே உளுத்துப் போன கொள்கைகளையே தற்போதைய அரசும் கண்மூடித்தனமாகக் கடைப்பிடிக்கின்றது. இதனை நாம் கடுமையாகக் கண்டிக்கிறோம்'' என இம்மாநாட்டில் பலரும் புதிய அரசு மீது குற்றஞ் சுமத்தினர்.

''லஷ்கர்-இ-தொய்பாவுடன் தொடர்புடைய அறக்கட்டளை நிறுவனமே, ஜமாத்-உட்-தாவா அமைப்பாகும். இதன் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை பாகிஸ்தான் அரசு நீக்க வேண்டும்'' என்றும் இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இம்மாநாட்டைச் சூழ, பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இம்மாநாட்டில் ஜெய்ஸ்-ஈ- மொஹமத், ஹார்காட்-உல்-முஜாஹிதீன், ஜமாத்-உட்-தாவா ஆகியவை உட்பட முன்னணி பாகிஸ்தான் தீவிரவாதக் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்.

# பெனாஸீரின் படுகொலை குறித்து சுயாதீன விசாரணை நடக்கும்

## ஐ.நா. செயலர் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், பெப்.6

''பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோவின் படுகொலை தொடர்பாக, வெகுவிரைவில் சுயாதீனமான விசாரணையொன்று மேற்கொள்ளப்படும்'' என பாகிஸ்தான் விஜயத்தை மேற்கொண்ட ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தலைநகரான இஸ்லாமாபாத்தில் தெரிவித்தார்.

''இது தொடர்பான விசாரணையை மேற்கொள்ள சுதந்திரமான ஆணைக்குழுவொன்றை நிறுவவுள்ளேன். பிரபல்யமான ஒருவர் இதன் தலைவராக நியமிக்கப்படுவார். இது சம்பந்தமாக பாகிஸ்தான் அரசுடனும் கலந்துரையாடினேன்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இப்படுகொலை உலகையே அதிர்ச்சிக்குள் உறைய வைத்தது. இது தொடர்பான காத்திரமான விசாரணையே தேவை. இவ்விசாரணை பாகிஸ்தான் அரசுக்கும், அதன் மக்களுக்கும் மிகமிக அவசியமாகும். இதனை நான் நன்கு உணர்கின்றேன்'' என்றும் அவர் கூறினார்.

# அமெ. அரசிடம் நிதிகோரும் விடயம் குறித்த பிரேரணையை ஏற்க ஒபாமா மறுப்பு

வாஷிங்ரன், பெப். 06

''அமெரிக்க அரசின் நிதி உதவிக் கோரும் நிறுவனங்கள், அமெரிக்க நிறுவனங்களிடமே கொள்முதல் செய்யவேண்டும் என நிர்ப்பந்திக்கும் பிரேரணை சர்வதேச அளவில் வர்த்தகச் சண்டைக்கு வழிவகுக்கும்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, அமெரிக்க ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தொலைக்காட்சிக்கு தாம் அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் பொருளாதார தேக்க நிலையை நீக்கவும், நலிவடைந்த நிறுவனங்களுக்கு உதவவும் அமெரிக்க அரசு நிதித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

பராக் ஒபாமா, இந்நிதித்திட்டம் தொடர்பாகவே, இப்பேட்டியை அளித்தார். இதில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ''தற்போதைய சூழலில் இந்த மசோதா மிகவும் தவறானது. சர்வதேச அளவில் பொருளாதார தேக்க நிலை நிலவும்போது, அமெரிக்க நிறுவனத்திலிருந்து மட்டுமே பொருள்களை வாங்க வேண்டும் என கட்டாயப்படுத்துவது மேலும் தேக்க நிலைக்கு வழிவகுக்கும். அத்துடன் சர்வதேச அளவில் வர்த்தகச் சண்டையும் ஏற்படும்'' என்றார்.

''மேலும் அமெரிக்காவின் இந்த முடிவுக்கு ஐரோப்பியா, கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இத்தகைய விதிமுறை அமெரிக்க அரசியல் வல்லுநர்களால் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு அமெரிக்க வர்த்தகச் சங்கமே கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''இந்த மசோதாவுக்கு எதிரான பிரசாரத்தை அமெரிக்க வர்த்தக சபையே மேற்கொண்டுள்ளது. இந்த மசோதா அமுல்படுத்தப்பட்டால், அது பிற நாடுகளிடமிருந்து கடுமையான எதிர்ப்பைச் சந்திக்க நேரும். இது அமெரிக்க பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக பாதகமான விளைவுகளுக்கு வழிசமைக்கும் என்றும் அச்சபை சுட்டிக்காட்டியுள்ளது'' என்றும் அவர் விளக்கினார்.

''அமெரிக்க நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள 81,900 கோடி டொலர் சலுகைத்திட்ட மசோதாவில் அமெரிக்கப் பொருள்களை மட்டுமே வாங்க வேண்டும் என்ற விதியும் அடங்கும். இதன்படி அரசு உதவி பெறும் நிறுவனங்கள் அமெரிக்க இரும்பு, உருக்கு ஆகியவை உள்ளிட்ட தயாரிப்புகளை மட்டுமே வாங்க வேண்டும்'' என்றும் அவர் எடுத்துரைத்தார்.

''உலகெங்கும் வர்த்தகம் சரிவைச் சந்தித்து வரும் நிலையில், அமெரிக்க அரசின் இந்த மசோதா தவறான செய்தியை பிற நாடுகளுக்கு பரப்பும். சர்வதேச வர்த்தகத்தில் அது மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த மசோதவுக்கு ஏற்கனவே கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள் ஆகியன கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன'' என்றும் அவர் கூறினார்.

இது குறித்து தனது எதிர்ப்பை கனடாவுக்கான அமெரிக்க தூதரிடம் கனடா அரசு தெரிவித்துள்ளது. அத்துடன் இது மிகவும் துரதிர்ஷ்டமானது என்றும் கனடா நாடாளுமன்றத்தில் அதன் உறுப்பினர் ஸ்டீபன் ஹார்ப்பர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபீட்சம் நிறைந்த வெற்றிப் பாதையில் எமது நாடு விரைவில் செய்மதியை ஏவும்!

## கண்காட்சியில் வைத்து ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு,பெப்.6

சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த எதிர் காலத்தை நோக்கிய வெற்றிகரமான பாதையில் இலங்கை தேசம் பிரவேசித்துள்ளது. வெகுவிரைவில் செய்மதியை விண்ணுக்கு ஏவும் திட்டங்களும் உண்டு - என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

'தேசத்துக்கு மகுடம்' தேசியக் கண்காட்சியை நேற்றுமுன்தினம் மாலை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதி அங்கு மேலும் கூறியவை வருமாறு-

புதியேதார் இலங்கையில் சகல சமூகத்தவர்களும் ஒரு தேசத்து மக்களாக ஐக்கியப்பட வேண்டும். தேசத்தின் எதிர்காலத்தை சிறப்பு மிக்கதாக மாற்றுவதற்கு அரசு மேற்கொண்டுவரும் வெற்றிகரமான பெறுபேறுகளை இக்கண்காட்சி பிரதிபலிக்கின்றது.

சமாதானத்தைம் சுபீட்சத்தையும் நிலைநாட்டும் முயற்சிகளுடன் அன்பும் கருணையும் இணையும்போது தேசத்துக்கு உண்மையிலே மகுடம் சூட்டலாம்.

நாட்டு மக்களுக்குத் தேவையான அரிசி உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. பொருளாதாரம் கணிசமான வளர்ச்சியைக் காட்டுகிறது. மின்வலுத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய திட்டங்கள் அமுலாகின்றன -என்றார். (அ-சி)

# இணைத்தலைமை நாடுகளின் அறிக்கை புலிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சி

## கோத்தபாய ராஜபக்ஷ சீற்றம்

கொழும்பு, பெப். 6

இணைத்தலைமை நாடுகள் வெளியிடுகின்ற ஒவ்வொரு அறிக்கையும் விடுதலைப் புலிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளே என்று தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. .

தற்காலிக யுத்த நிறுத்தம் செய்யு மாறும், புலிகள் சரணடைவது குறித்துப் பேச்சு நடத்துமாறும் இணைத்தலை மைகள் வெளியிடுகின்ற கருத்துக்களை அவர் முற்றாக நிராகரித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற விதத்தில் சரணடைவதை மட்டுமே இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளுமென கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் கோத்தபாய கூறியிருப்பதாவது:-

''விடுதலைப் புலிகள் சரணடைவது குறித்து பேச்சுகளை மேற்கொள்வது பற்றிய கேள்விக்கே இடமில்லை. அவர்கள் நிபந்தனையற்ற விதத்தில் சரணடைய வேண்டும். முதலில் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்''.

**புலிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தினர்**

கடந்த வாரம் 48 மணித்தியால அவகாசத்தை அரசு அறிவித்ததை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் மூன்று டிரக்குகளில் வெடிமருந்துகளை நிரப்பி முன்னரங்குகள் மீது தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இணைத் தலைமையின் வேண்டுகோள் போன்று வேடிக்கையான விடயம் வேறு எதுவுமிருக்க முடியாது. நிபந்தனையற்ற விதத்தில் புலி உறுப்பினர்கள் சரணடைவதும் ஆயுதங்களை ஒப்படைப்பதும் மாத்திரமே தற்போதைய இராணுவ நடவடிக்கையை முடிவிற்கு கொண்டு வரும்.

மேலும் இணைத் தலைமை நாடுகளின் அறிக்கை விடுதலைப் புலிகளைக் காப்பாற்றுவதற்கான வெளிப்படையான முயற்சி - என்றும் அவர் வர்ணித்துள்ளார். (அ-சி)

எரிக் சொல்ஹெய்ம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுவரும் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்படும் பொதுமக்களின் நிலைமைகள் குறித்துக் கவலை தெரிவித்தார்.

முகர்ஜியைச் சந்தித்தபின் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

இலங்கையில் தற்போது நிகழ்ந்துவரும் மோதல்கள் காரணமாக பொதுமக்கள் தினமும் பாதிக்கப்படுகின்றனர். உயிரிழப்புக்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. எனவே, இரு தரப்பினரும் யுத்தத்தை உடனே நிறுத்திபேச்சு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வரவேண்டும் - என வலியுறுத்தினர்.

இதேவேளை, எரிக்சொல்ஹெய்ம் இந்தியாவின் தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் எம்.கே.நாராயணனையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (அ-சி)

# போர்ப் பிரதேசத்தில் அகப்பட்டுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்த பிரணாப் வலியுறுத்து

புதுடில்லி,பெப்.6

இலங்கையின் வடக்கே போர் பிரதே சத்திற்குள் அகப்பட்டுள்ள தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு இலங்கை அரசிடம் இந்திய வெளியுறவுத்துறை அமைச் சர் பிரணாப் முகார்ஜி மீண்டும் நேற்று வியாழக்கிழமை வலியுறுத்தியுள்ளார்

அதேபோன்று விடுதலை புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களிலிருந்து பொதுமக்களைஅரசாங்கம் அறிவித்துள்ள பாதுகாப்பான பிரதேசங்களுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் அமைச்சர் பிரணாப் இங்கு செய்தி யாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்

பொதுமக்கள் குறித்து தாங்கள் அதிகம் கரிசனை கொண்டுள்ளதாகவும் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்கும் அதேவேளை பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு ஆபத்து ஏற்படாமல் இருப்பதை இலங்கை அரசு உறுதிசெய்யவேண்டும் என்றும் பிரணாப் கேட்டுக்கொண்டார்.

தசாப்தங்களாகத் தொடரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொள்ளும் என்றும் பிரணாப் நம்பிக்கை வெளியிட்டார்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே இடம்பெறும் போரில் அகப்பட்டுள்ள மக்கள் உண்மையிலேயே மிகவும் கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள னர். அவர்கள் ''பாதுகாப்புப் பிரதேசங்க ளுக்கு கூட்டிச் செல்லப்பட வேண்டும்'' என்றும் பிரணாப் செய்தியாளர்களிடம் கூறினார்.

முல்லை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமை நள்ளிரவு 12.20, அதி காலை 1.55, விடியற்காலை 4.45 மணியளவில் எம்.ஐ.24 ரக ஹெலிகொப்டர்களும், முற்பகல் 11.10, பிற்பகல் 1.45, 2.45, 3.15, 4.15, 5.45 ஆகிய மணி நேரங்களில் ஜெற் விமானங்களும் தாக்குதல்களை நடத்தின.

படைத்தரப்பின் 59ஆவது படைப் பிரிவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே இத்தாக்குதல்கள் நடத்தப் பட்டன என்று படைத் தரப்பில் மேலும் கூறப் பட்டது.

எந்தச் சக்தி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில ஊடகங்கள் தெரிவித்தன.

புலிகள் அவ்வாறு சரணடைவது மிகவும் அறிவு பூர்வமான தீர்மானமாகும். அவ்வாறு சரணடைந்தால் நாம் அவர்களை மிகவும் கௌரவமாக வரவேற்போம் - என்றார். (அ-சி)

பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட தாக்குதல்களில் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

தேவிபுரம் பகுதியில் நேற்றைய தாக்குதலில் 6 அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 24 பேர் காயமடைந்துள்ளனர் என்று இணையத்தள செய்திகள் மேலும் தெரிவித்தன. (அ-சி)

புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் ஆழ்ந்த கவலையடைகிறோம். இலங்கையில் அமைதியை ஏற்படுத்த நாம் எம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்வோம்-

துரதிஷ்டவசமாக ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு விடுதலைப்புலிகளை எங்களால் ஒத்துக்கொள்ள வைக்க முடியவில்லை. ஒரு கட்டத்துக்கு மேல் இலங்கை அரசு மீதும் அழுத்தம் கொடுக்க இயலவில்லை. இது குறித்து மிகுந்த வேதனைப் படுகிறோம். இந் நிலையில் இரு தரப்பினரும் போரை நிறுத்த பேச்சுக்களில் இறங்க வேண்டும் என்றும் அமைச்சர் ப.சிதம்பரம் மேலும் குறிப்பிட்டார். (அ-02)

கொத்தணிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியான கொத்தணிக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானதாக ஐக்கிய நாடுகளின் கொழும்பு பேச்சாளர் தெரிவித்துள்ளமையை மன்னிப்புச்சபை சுட்டிக் காட்டியுள்ளது.

கொத்தணிக் (கிளாஸ்ரர் )குண்டுகளை இவ்வாறான சூழ்நிலைகளில் பயன்படுத்துவது யுத்தக் குற்றமாக கருதப்படும் எனச் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக்கிற்கான இயக்குநர் சாம் ஜரிவி தெரிவித்துள்ளார்.

கொத்தணிக் குண்டுகள் பரந்துபட்ட பகுதியில் வெடித்துச் சிதறக் கூடியன என்பதாலும் பொதுமக்கள் உட்பட அனைத்து உயிரினங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை என்பதாலும் இவற்றைப் பயன்படுத்துவது கண்மூடித்தனமான செயல் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புகள் தாம் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை கடுமையாக மீறியதற்கான பொறுப்புணர்வை ஏற்பதில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கு யுத்தக் குற்றங்களை விசாரிப்பதற்கான கடப்பாடுள்ளது. மேலும் போதியளவு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆதாரங்கள் உள்ள பட்சத்தில் குறிப்பிட்ட சந்தேக நபரை விசாரணைக்கு உட்படுத்தலாம் என்றும் சாம் ஜரிவி சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை 2008ஆம் ஆண்டு கொத்தணி ஆயுத பிரகடனத்தில் கைச்சாத்திடாததையும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (அ-சி)

**CHEMISTRY**
ஆரம்பமாகின்றது...
2011 : Fri - 3pm
2010 : Fri - 4.30pm (Inorganic)
N.VAKEESAN
கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வு.

மற்றிரு பிரிவுகள்
A/L தமிழ் 2009
& Day Paper
சனி,ஞாயி I -9.00
II-10.00
நாகதமிழிந்திரன்
Arts Academy
நாவலர் (AOA) வீதி
2010,2011 ஆரம்பித்து விட்டது

**முக்கிய அறிவித்தல்**
இலங்கை சட்டக்கல்லூரி அனுமதிக்கான
போட்டிப் பரீட்சை வழிகாட்டி வகுப்புகள்
07.02.2009 (சனி) காலை 9.00 மணிக்கு
"கலைக்கோட்டம்" பிரதான வீதி, யாழ்ப்பாணம். (தண்ணீர்த் தாங்கி அருகில்) எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.
குறிப்பு: ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்ட அனைவரும் தவறாது சமுகம் தரவும். புதிய பதிவுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
Academy for legal Environment.
No:01, Brown Road, Navalar Road Junction, Jaffna
Tell: 021 222 7646
E.mail: afle@gmail.com.

**இலவச கருத்தரங்கு**
சட்டக்கல்லூரி அனுமதி மற்றும் சட்டக்கல்வி தொடர்பான இலவச கருத்தரங்கு கொழும்பில் இருந்து வருகை தரும் சட்டக்கல்லூரி விரிவுரையாளர்க ளால் நடத்தப்படவுள்ளது. ஆர்வம் உள்ள மாணவர்கள், பெற்றோர்கள் அனை வரும் கலந்து கொள்ளலாம்.
நேரம்: காலை 9 சனிக்கிழமை (07.02.2009)
இடம்: "கலைக்கோட்டம்", பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
Academy for legal Environment,
No:01, Brown Road, Navalar Road Junction, Jaffna
Tell: 021 222 7646
E.mail: afle@gmail.com.

**குரு வித்வா இசை பயிலகம்**
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
ஓகன், ஹார்மோனியம், மெலோடிக்கா
ஆசிரியர்:- இசைக்கலைமணி கலாவித்தகர் ந.செல்வச்சந்திரன்
இடம்:- சாயிஇல்லம், இல.1A, கனகசபைவீதி, மானிப்பாய்
காலம்:- 08.02.2009
நேரம்:- காலை 9மணிமுதல் 11 மணி வரை
தொடர்பு:- சாயிகுருபுத்தகநிலையம், மானிப்பாய், இந்துக்கல்லூரி முன்பாக, மானிப்பாய்.

SHAMROCK
A/L 2009 DAY
PHYSICS
* இலத்திரனியல் Tue,Thu 3.30pm
* PAPER-mon,wed,fri 6.15 am
Mr.K.கஜன்
C/MATHS
* புள்ளிப்புலம்
* வட்ட இயக்கம்
sat, sun- 4- 6pm
Mr K. ஜுபரன் B.sc
CHEMISTRY
ORGANIC
Mr.M.A. நிரோஜன்.
A/L 2011 ஆரம்பமாகியுள்ளது

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
CIMA
புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்
ஆரம்பம் : 28/02/2009
Chartered Accountancy
மிக விரைவில் ஆரம்பமாகிறது, பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.
Further Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவபாக்கியம்

வட்டுக்கோட்டை, சங்கரத்தையைச் சேர்ந்த கந்தையா சிவபாக்கியம் நேற்று (05.02.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் - நேசம்மாவின் அன்பு மகளும் சிவகுருநாதர் கந்தையாவின் அன்பு மனைவியும் சர்வேஸ்வரி (கனடா), ஸ்ரீபாஸ்கரன் (இலங்கை வங்கி), ரகுமார் (சுவிஸ்), வசந்தவேணி (ஜேர்மனி), சுகுணராணி (லண்டன்), கலைவாணி, சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நவநீதன், செல்வநாயகி, விமலரஞ்சினி, தவராசா, அருளானந்த கணேசன் ஆகியோரின் மாமியும் அபிராமி, மதிசூதனன், தனுஷன், தர்ஷனா, சாமினி, சுஜாஜினி, சுஜாந்தன், அகிலா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2009) வெள்ளிக்கிழமை நண்பகல் 1மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

தகவல்:
ஸ்ரீபாஸ்கரன்
(மகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org